# கனகத்தூதன்

Canadian Tamil Catholic Messenger

CanaCaThuthan

உண்மையை உரைக்க — TO TELL THE TRUTH

Publication Mail
Agreement No: 41416031

Return Undeliverable
Canadian Addresses to:
The Canadian Tamil
-Catholic Messenger
708 Aspen Road
Pickering, ON L1V 3Z1

Issue 64 | August 10, 2024 | இதழ் 64


மிடலன்ட்
திருயாத்திரைச் சிறப்பிதழ்

**Special Issue on
Midland Pilgrimage**




## நம் மருதமடு அன்னைக்கு அருட்பணி எயின்சிலி றொசான் (திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் இயக்குனர் - யாழ் மறைமாவட்டம்) தலைமையில் திருவிழா!

*August 11, 2024* ஞாயிற்றுக்கிழமை புனித ஆரோக்கிய அன்னை ஆலயம்

(விபரங்களுக்கு - பக்கம் 3)



### யூபிலி ஆண்டின் புனிதக் கதவுகள் திறக்கப்படும் விவரங்கள்

3ஆம் பக்கம்

### மிட்லாண்ட் திருத்தலத்தில் ஒரு பங்கேற்பாளனின் குரல்

12ஆம் பக்கம்












10th Annual
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
EXPECTED ATTENDEES
300, 000 +
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
FREE ADMISSION
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
PROUDLY HOSTED BY
SUPPORTED BY
Canada
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
Booth Inquiries:
info@canadiantamilcongress.ca
416.240.0078
tamilfest.ca
@TamilFest

# யூபிலி ஆண்டின்...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

2025ஆம் ஆண்டின் யூபிலிக் கொண்டாட்டங்களையொட்டி பேராலயங்களிலும் தேசிய திருத்தலங்களிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படுவது குறித்த விதிமுறைகளையும் விவரங்களையும் திருப்பீடம் வெளியிட்டுள்ளது.

வழக்கப்படி உரோம் நகரிலுள்ள 4 பாப்பிறை பெருங்கோவில்களிலும், திருத்தந்தையின் விருப்பப்படி, சிறைக்கைதிகளுடன் நெருக்கத்தை வெளிப்படும் விதமாக ஒரு சிறைச்சாலையிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்ட திருப்பீடத்தின் நற்செய்தி அறிவிப்புக்கான துறை, ஜூபிலி ஆண்டின்போது உலகிலுள்ள மறைமாவட்ட பேராலயங்களிலும், பன்னாட்டு மற்றும் தேசிய திருத்தலங்களிலும், ஏனைய முக்கியத்துவம் நிறைந்த வழிபாட்டுதலங்களிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படும் என அதில் தெரிவிக்கிறது.

ஒப்புரவு அருள்சாதனம், பிறரன்பு மற்றும் நம்பிக்கை நடவடிக்கைகளின் வழி, இறைவனின் வரையறையற்ற அன்பிலிருந்து வரும் பாவமன்னிப்பை இந்த யூபிலி ஆண்டில் புனித கதவுகள் வழிச் செல்வது வழங்கும் என்பதைச் சுட்டிக்காட்டும் இந்த அறிக்கை, அருளின் இந்த நேரத்தை அனைவரும் முற்றிலுமாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் அழைப்புவிடுக்கிறது.

உரோம் நகர் பேராலயங்களின் புனித கதவு திறக்கப்படும் நாட்கள்:
யூபிலி ஆண்டானது கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முந்தைய நாளில் உரோம் நகர் புனித பேதுரு பெருங்கோவிலின் புனித கதவு திறக்கப்படுவதுடன் ஆரம்பிக்க உள்ளது.
உரோம் நகர் பேராலயங்களின் புனித கதவு திறக்கப்படும் நாட்கள்:
டிசம்பர் 24, 2024 - புனித பேதுரு பெருங்கோவில்
டிசம்பர் 29, 2024 - புனித ஜான் இலாத்ரன் பெருங்கோவில், அதைத் தொடர்ந்து அதே நாளில் உலகிலுள்ள அனைத்து மறைமாவட்ட பேராலயங்கள் மற்றும் துணை பேராலயங்கள்.
ஜனவரி 1, 2025 - இறைவனின் அன்னையாம் மரியன்னை திருவிழாவன்று புனித மேரி மேஜர் பெருங்கோவில் ஜனவரி 5, 2025 - திருக்காட்சி திருவிழாவுக்கு முந்தைய நாள், உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவில்.

2025ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் தேதி புனித ஜான் இலாத்ரன், புனித மேரி மேஜர், புனித பவுல் பெருங்கோவில்களுடன் உலகின் அனைத்து மறைமாவட்ட பேராலயங்களின் கதவுகளும் மூடப்படும் என அறிவிக்கும் நற்செய்தி அறிவிப்புக்கான திருப்பீடத்துறை, 2026 ஜனவரி 6ஆம் தேதி திருக்காட்சி திருவிழா கொண்டாட்டத்தின்போது யூபிலி ஆண்டு அதிகாரப் பூர்வமாக நிறைவுக்கு வரும் எனவும் அறிவிக்கிறது.

# உங்களின் இளமை இயேசுவின் கொடையாகட்டும்!



கிறிஸ்து உங்கள் இயற்கையான நம்பிக்கையை உண்மையான அன்பாக மாற்றட்டும்; அவரின் அன்பு தியாகம் செய்யத் தெரிந்தது நேர்மையானது, நம்பகத்தன்மை கொண்டது, உண்மையானது, இதனால் உங்கள் இளமை இயேசுவுக்கும் உலகத்திற்கும் ஒரு கொடையாக மாறட்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

ஜூலை 15 முதல் 20 வரை பராகுவேயின் அசுன்சியோனில் இடம்பெற்றுவரும் கரீபியன் மற்றும் இலத்தீன் அமெரிக்க தேசிய இளைஞர் அமைச்சகத் தலைவர்களின் 23-வது கூட்டத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் பங்கேற்பாளர்களை வாழ்த்துவதில் தனது மகிழ்ச்சியையும் திருத்தந்தை வெளிப்படுத்தினார். இக்கூட்டத்தின் பங்கேற்பாளர்களை வாழ்த்துவதில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய திருத்தந்தை, திருஅவைக்கான இளையோர் பணியின் மதிப்பை வலியுறுத்தியதுடன், தங்கள் ஆற்றலைப் பயன்படுத்தி கிறிஸ்து பெரிய காரியங்களைச் செய்ய இளைஞர்கள் அவரை அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இயேசு கூறும் ‘எழுந்திரு’ என்ற கட்டளை, ஒரு பணியையும் பொறுப்பையும் குறிக்கிறது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, நம்மைக் கடந்து சென்று நம் காதில் கிசுகிசுத்து, கீழே குனிந்து, நாம் விழும் ஒவ்வொரு முறையும் நம்மை உயர்த்துவதற்குத் தம்முடைய கரங்களைக் கொடுக்கும் இறைவனுக்கு நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அங்குகூடியுள்ள அனைவரையுயம் மரியாவிடம் கொடுப்பதாகவும், எம் அன்னை உங்களுடன் பயணித்து உங்களுக்காகப் பரிந்து பேசுவாராக! என்று ஆசீர் வழங்கினார். இதனால், குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் முதியோர்களுடன், உலகளாவிய ஒன்றிப்பில், நீங்கள் இன்னும் அதிகமான ஒன்றிணைந்த பயணம், சீடத்துவம் மற்றும் மறைபோதகத்தை உள்ளடக்கிய திருஅவையின் கதாநாயகர்களாகவும் இருப்பீர்களாக என்றும் வாழ்த்தினார்.

# கடவுள் கொடுத்த பரிசு நமது இருப்பு - திருத்தந்தை

நமது இருத்தல் என்பது நமக்கும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் கடவுள் கொடுத்த ஒரு பரிசு என்றும், கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார், மாறாக நமது குரலுக்கு செவிசாய்த்தல், மகிழ்தல், அழுதல் என எல்லாவற்றையும் நம்மோடு இணைந்து செய்வதை நன்கு அறிந்தவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். வாழ்க்கையானது எப்பொழுதும் வாழ்வதற்குத் தகுதியானது என்றும், எல்லாமே நம்மை விட்டு மறைந்து போவது போல தோன்றினாலும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை எப்போதும் கொண்டுள்ளது என்றும் தன் குறுஞ்செய்தியில் வெளியிட்டுள்ள திருத்தந்தை, நமக்கும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் கடவுள் கொடுத்த ஒரு பரிசு நமது வாழ்நாள்களின் நீட்டிப்பு, அதுதான் நமது இருத்தல் என்றும் குறிப்பிட்டார்.

கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் மாறாக நமது குரலுக்கு எவ்வாறு செவிசாய்ப்பது, நம்மோடு மகிழ்வது, துன்ப நேரத்தில் நம்முடன் அழுவது என எல்லாவற்றையும் நன்கு அறிந்தவர் அவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.



கனகத்தூதன்
Canadian Tamil Catholic Messenger
CanaCaThuthan

நிறுவனர்/Founder:
அன்ரன் சின்னராசா பிலிப்
Anton Sinnarasa Philip

ஆசிரியர் குழு இணைப்பாளர்/
Editorial board coordinator:
ஆனந்தம் அன்ரனி
Anantham Antony

canacathuthan@gmail.com
416.300.7026

நிர்வாகம்/Administration:
அஞ்சலோ சுவாம்பிள்ளை
Angelo Swampillai

கனகத்தூதன் (கனடாவின் கத்தோலிக்க தூதனாக) கடவுளின் அரும்பெரும் செயல்களை எடுத்துரைக்கவும், தனது வாசகர்களுக்கு திருச்சபையின் போதனைகளையும் அறிவுறுத்தவும், ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தவும், விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தவும், உலக, தாயக, கனடிய கத்தோலிக்க செய்திகளை உண்மையான வழியில் தரவும் முயற்சி செய்வான்(ள்). கனகத்தூதனில் தோன்றும் ஆக்கங்கள், படைப்புகள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்பாவர். விளம்பரங்களில் இடம் பெறும் தகவல்களுக்கு கனகத்தூதன் பொறுப்பல்ல.

The CanaCa Thuthan EVANGELIZES by proclaiming stories of God's great deeds taking place in the universal Church. CanaCa Thuthan EDUCATES by challenging its readers to a deeper understanding of Catholic teaching and to a greater commitment in living it out. CanaCa Thuthan INFORMS by providing objective and accurate news information about the church, both local and worldwide. CanaCa Thuthan does not take the responsibility of the views expressed by various authors and the information in the advertisements.

கனகத்தூதனை
இப்போது e-paper
ஆகவும் வாசித்திடலாம்.

தங்கள் பிரதிகளுக்கு
canacathuthan@gmail.com
or
416 300 7026

# ஆசிரிய குழுவின் எண்ணங்கள்...

**நலமாய் வாழ்வோம், இறை வேண்டலுக்கு முன் உரிமை கொடுப்போம்!**

ஜூபிலி ஆண்டுக்கு (2025) தயாரிக்கும் விதமாக 2024ஆம் ஆண்டை ஏற்கனவே இறைவேண்டலின் ஆண்டாகதிருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளது நாம் அறிந்ததே.
நலமாய் வாழ எண்ணமில்லாத மனிதர் யாரும் இல்லை. நலமென்று சொல்லும் போது உடல் நலம் மட்டுமல்லஉள நலத்தையும் எண்ண மறக்கக்கூடாது.

மனிதன் ஒருவனாய், குழுவாய் பல வழிமுறைகளையும், சட்ட திட்டங்களையும், ஆட்சி முறைகளையும் வகுத்துமகிழ்ச்சியுடன் வாழ இன்றும் முயன்று வருகிறான். ஆனாலும் அவன் முயற்சி வெற்றி அளிக்காமல்மாற்றுவழிமுறைகளை இதயத்தின் கனவுகளாக சுமந்து வருகிறான்.
இறைவனோ மனிதனின் கனவை வாழ்வாக்க இறை வெளிப்பாடாக தன்னையே தந்தார். வழிகாட்டும் வழியைகண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக "இறையாட்சி" என்னும் தாரகமந்திரத்தை அனைவரும் வாழவேண்டிஇதை மட்டுமே சீடர்களுக்கு கொடுத்தார்.
இறையாட்சி என்பது இறை-மனித உறவை மட்டுமல்ல இயற்கையோடு கொண்ட உறவை புதுப்பிப்பதும் அதன்இயல்பு நிலையை பெறச்செய்வதுமாகும்.

இறையாட்சியின் பண்புகளைக்குறிப்பிட்டால், இது நிகழ்காலம் சார்ந்தது மட்டுமன்றி இறுதிகாலத்தன்மை, ஆன்மீகத்தன்மை, அறநெறித்தன்மை, இறையாட்சி சமூகத்தன்மை, இயேசு காட்டும் மீட்ப்பியல் தன்மை, பொருளாதாரத்தன்மை என்பவற்றையும் கொண்டது. இது தனிப்பட்ட ஒருவருக்கு மட்டுமல்ல மானிடர்அனைவருக்கும் உரியதாகும்.

இயேசு காட்டும் இறையாட்சி பரந்துபட்டது என்பதால், மனிதன் - இறைவன் - உலகம் எனும் மூன்று உறவின்அடிப்படையிலும் புரிய முயல்வதே சிறந்ததாகும். இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய ஒரேஉறவாகும்.

இறையாட்சி, ஆன்மீகமாய் வாழ வழி சொல்லும் இயேசுவின் நடைமுறை விளக்கம் என்பதை மனதில் கொண்டுஇறையாட்சி என்ற தாரக மந்திரத்தில் வாழ வழிவேண்டி இறை வேண்டல் செய்வோம்.
நாம் எமக்காக மட்டுமல்ல எம்மை சுற்றியுள்ள மனித உறவுகளுக்காகவும், இறைவனடி சேர்ந்த அன்புஉள்ளங்களுக்காகவும், இயற்கைக்காகவும், இறை வேண்டல் செய்வோம்

திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்ட து போல நாம் ஒருவர் ஒருவருக்காக செபிக்கும் அருளைஇறைவனிடம் வேண்டுவோம். சிறப்பாக, நாம் பிறரைக் குறித்து குறைகூறுவதை விடுத்து அதிக நேரத்தைஇறைவேண்டலில் செலவிடுவதைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

இயேசுவின்அழைப்பை ஏற்று இறையாட்சி அனுபவத்தை தொடர்ந்து வாழ்வாக்குவோம், உடல் உள நலத்துடன்மகிழச்சியுடன் வாழ வாழ்த்துகிறோம்!

---

# ரொறொண்டோ ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் மருதமடு அன்னையின் திருவிழா




**11 August 2024**

**12:00 மணிக்கு - செபமாலை**

**12:30 மணிக்கு - அருட்பணி எயின்சிலி றொசான் தலைமையில் கூட்டுத்திருப்பலியும், அதைத்தொடர்ந்து அன்னையின் திருஉருவ உலா**

**131 Birchmount Rd Scarborough ON M1N 3J7**

**அனைவரும் வாரீர்! அன்னையின் அருளை பெற்றிடுவீர்!**

கனகத்தூதன்
CanaCaThuthan

# “நமது இறையியல் அணுகுமுறை இறையன்பின் வெளிப்பாடானஇயேசு கிறீஸ்துவைப்பற்றிய மறை பொருளைப்புரிந்துகொள்ளவும், அவர் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளை நம் வாழ்வில்கடைப்பிடிப்பதுமே”




அருள்பணி ம. டைட்டஸ் மோகன்

திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையில் திரு அவையின் இறையியல் அறநெறி குறித்து, இன்று ஏன் நாம் பேசவேண்டும்? கோபால் தாஸ் எனும் ஆன்மிக வழிகாட்டி முன் வைக்கும் மூன்று ‘சி’ (*C*) களான தொடர்பு ( *connection*). உருவாக்கம் அல்லது வளர்ப்பு( *Cultivation*). பங்களிப்பு (*Contribution*) இம்மூன்றையும்மையங்கொண்டதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணியும், வாழ்வும் அமைந்துள்ளதால், அவரதுஅறநெறி இறையியலில் புதுப்பார்வையும் புதுத் தெம்பும் பெறுகிறது.

ஒரு செடியின் வேர்போல இறையன்பில் வேரூன்றி, தண்டு போல தன் அன்பிலும், தன்னிறைவிலும் வளர்ந்து, காய்-கனி போல பிறரன்பில் பங்களிப்புச் செய்யும் பாங்கு அவருக்கே உரியது. இறையன்பின் வழியாககடவுளோடு தொடர்பு கொண்டு, தன்னன்பின் வழியாகத் தன்னையே உருவாக்கி, பிறரன்பின் வெளிப்பாடாகநற்செயல்களை ஒருவர் முன்னெடுக்கவில்லையெனில் வாழ்வு அர்த்தம் இழந்து விடும்.

அவ்வகையில் தனது இறையியல் அறநெறியில் தவறு என்கிற சாதாரண பார்வையைக் கடந்து, மன்னிப்பு என்கிறமுன்னேற்றப் பார்வையை முன்வைக்கிறார். செய், செய்யாதே என்கிற கட்டளைத் தன்மைகளைத் துறந்து, கடமை, கண்ணியம் என்கிற உணர்வுகளுக்குக் கை கொடுக்கிறார். இப்படி, அப்படி என்கிற போதனைகளைத்தாண்டி மனித அவலங்கள், வேதனைகளை முன்னிறுத்துகிறார். பாரம்பரிய அணுகுமுறைகளை அலசி, தொடரும் எதார்த்தங்களுக்குப் படிப்பினை கற்பிக்கின்றார்.

“என் மக்கள்படும் துன்பங்களைக் கண்டேன்; அவர்கள் எழுப்பும் கூக்குரல் என் காதுகளை எட்டுகிறது” (விப3:7-8 ) என்ற யாவே கடவுளின் உடனிருப்பை இன்று நாம் வாழும் சூழல்களில் எடுத்துரைப்பதும், வாழ்வாக்குவதும் எளிதான காரியமல்ல, சவால் மிகுந்தது. அத்தகு சவால்களை அனுதினமும் சந்திப்பவர்தான்நம் திருத்தந்தை.

## அன்பு இறையியல் அறநெறி

கேன்டர்பரி புனித அன்சலேம் பார்வையில் பாரம்பரியமாக இறையியலை “ புரிதலைத் தேடும் நம்பிக்கை” (*Fides Quarens Intellectum*) என்று வரையறுக்கிறோம். அதாவது கடவுளைப் புரிந்து கொள்ள முற்படுவதுநமது நம்பிக்கையே. இருப்பினும் உண்மை என்னவெனில், கடவுளின் மீதுள்ள அளவுகடந்த அன்பே அவரைப்பற்றிய ஆழமான அறிவுக்கு நம்மை வழி நடத்துகிறது. நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு (1கொரி 13:13 ) ஆகியவற்றிற்கு இடையே நெருக்கமான பிணைப்பு இருப்பதால், இறையியலை நாம் “ புரிதலைத் தேடும் எதிர்நோக்கு” (*Spes Quaerens Intellectum*) மற்றும் ‘புரிதலைத் தேடும் அன்பு’ ( *Caritas Quaerens Intellectum*) என்று வகைப்படுத்துவதும் தகுதியானதே.

எனவே, உலகின் தற்போதைய சூழலில் புனித அன்சலேமின் முன்மொழியிலிருந்து பெறப்பட்ட புரிதலைத்தாண்டிய இறையியல் பார்வையை நாம் பெறுவது அவசியம். இவ்வகையில் நமது இறையியல் அணுகுமுறைஇறையன்பின் வெளிப்பாடான இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளைப் புரிந்து கொள்ளவும், அவர்வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதுமே!

இக்கருத்தோட்டப் பின்னணியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறையியல் பார்வையை அவர் எழுதியமுக்கிய மடல்களின் அடிப்படையில் புரிந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலான அவரது எழுத்துகள் அவரது’கடவுள் அனுபவத்திலிருந்து உருவாகும் மகிழ்ச்சி’என்ற கருப்பொருளைச் சுற்றி வருகின்றன. அவரதுஎழுத்துகளில் வெளிப்படும் தொலைநோக்குப் பார்வையின் போக்கில் அவரது இறையியலுக்கு புதியவரையறையைக் கொடுப்பதாயின், அதை நாம்’ நம்பிக்கை தேடும் மகிழ்ச்சி’ (*Faith seeking Joy* ) என்றேஅழைக்கலாம்.

இறை நம்பிக்கை ஒளியில் (*Lumen Fidei*) மகிழ்ச்சி, நற்செய்திப் பகிர்வில் மகிழ்ச்சி (*Evengelii gaudium*). படைப்புடன் இறைவனைப் புகழ்வதில் மகிழ்ச்சி (*Laudato Si*),அன்பில் மகிழ்ச்சி (*Amoris Laetitia*), உண்மையை அறிவிப்பதில் மகிழ்ச்சி (*Veritatis Gaudium*), இன்றைய உலகில் புனிதமாய் வாழ்வதில் மகிழ்ச்சி(*Gaudete et Exultate*), கிறிஸ்து வாழ்வதை இளமையில் பிரதிபலிப்பதில் மகிழ்ச்சி (*Christus Vivit*), சகோதரத்துவத்தை வாழ்வாக்குதலில் மகிழ்ச்சி ( *Fratelli Tutti*...).

இங்ஙனம் திருத்தந்தையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கிறிஸ்தவ நடவடிக்கையின் மகிழ்ச்சியும் நமதுஇறையியல் பார்வையிலிருந்து உருவாகிறது. இத்தகைய தரிசனம் நாம் வாழும் எதார்த்தத்திற்கு ஒருநேர்மறையான கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. இயேசு நம்மை வழிநடத்த விரும்பும் புதியஎதார்த்தத்திற்குள் நம்மை அழைத்துச் செல்கிறது. அதுவே மகிழ்ச்சி நிரம்பிய இடம். அவ்விடமே கடவுளின்இருப்பிடம் !

கடந்த மே 21, 2024 தனது ‘டுவிட்டர்’ குறுஞ்செய்தியிலும் , “நமது இறை நம்பிக்கை என்பது அன்பிலிருந்துபிறக்கிறது. இது சிலுவையில் இயேசுவின் இதயத்தில் துளைக்கப்பட்ட அன்பின் அடிப்படையில் பிறக்கிறது. தூய ஆவியார் நம்பிக்கையின் ஒளியை ஒரு நிரந்தர விளக்கைப்போல எரியச் செய்து, நம் வாழ்க்கையைநீடிக்கச் செய்து நம்மை உற்சாகப் படுத்துகிறார்”என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வாழ்க்கை முறை அவசியம்
வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் பிரகாசிக்கும் திருத்தந்தையின் இறையியல்

# நமது இறையியல் அணுகுமுறை...

5ஆம் பக்கத் தொடர்ச்சி



அறைநெறி உலகு, திருஅவையில் நாம் வாழ்வதற்கான நற்செய்தியின் அத்தியாவசிய உள்ளடக்கத்தை மிகவும் தீவிரமாகவெளிப்படுத்தும் இறையியல் வடிவத்தைக் கொண்டுள்ளது.

இறையியலாளர் தியோபால்ட் குறிப்பிடுவதுபோல் வடிவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் இடையிலானஒத்திசைவின் கொள்கைக்கு இணங்க (*Principle of concordance between from and content*), அவரதுஇறையியலைக் கோட்பாட்டுப் போதனையாகக் குறைக்க முடியாது. மாறாக, இது ஒரு வாழ்க்கை முறையைவெளிப்படுத்துகிறது.
எப்படிக் கடவுள் தம்மை இயேசுக் கிறிஸ்து வழியாக. வெளிப்படுத்தியுள்ளார் என்னும் உண்மையை மையப்பொருளாகக் கொண்டு அதன் உள்ளிடுகையை அறிவியல் முறைப்படி ஆய்ந்து, கடவுளின் வெளிப்பாட்டைமக்கள் தங்கள் வாழ்வில் அனுபவித்து, அறிந்து, உணர்ந்து ஏற்று அதனடிப்படையில் கிறிஸதுவின் சீடர்களாகவாழ்ந்திட இவ்விறையியல் துணைபுரிகிறது.
இறைவனோடு நாம் கொண்டிருக்கும் உறவுத் தொடர்பு எத்தகையதாக அமைந்துள்ளது ? நம் மீதான அன்புஎத்தகு வளர்ச்சி நிலைகளை நமக்குள் ஏற்படுத்துகிறது? பிறர் நலம் சார்ந்த பங்களிப்புகள் எவற்றையெல்லாம்நாம் முன்னெடுக்கிறோம்.

அறிவோம் ! ஆய்வோம் !
வாழ்வை அர்த்தமாக்குவோம்!

# குழந்தை பிறப்பு அல்ல, சுயநலமே நமது உலக பிரச்சனைக்குக் காரணம்!




நமது உலகின் பிரச்சனை என்பது அதில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை அல்ல, மாறாக சுயநலம், நுகர்வோர் மற்றும் தனிமனிதவாதம்தான் அப்பிரச்சனைக்குக் காரணம் என்று ஜூலை 11, உலக மக்கள்தொகை நாள் சிறப்பிக்கப்படும் வேளை, தனது டுவிட்டர் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். அத்துடன் சுயநலம், நுகர்வோர் மற்றும் தனிமனிதவாதம்தான் மக்களைத் திருப்தியடையவும், தனிமையடையவும், மகிழ்ச்சியற்றதாகவும் ஆக்குகிறது என்று கவலை தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் உலக மக்கள் தொகை நாள் ஆண்டுதோறும் ஜூலை 11-ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜூலை 10, 2024 புதன்கிழமை நிலவரப்படி தற்போதைய உலக மக்கள் தொகை 812, 5,08, 228. இதே நாள் கணக்குப்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 1,442,017,450.

கனகத்தூதன்
CanaCaThuthan

# கடவுளால் எல்லாம் முடியும் என்ற நம்பிக்கை வேண்டும்



உக்ரைனில் உள்ள தலத்திருஅவையானது இறைவாக்கினர் எலியாவைப்போல இறைவாக்குப் பணி செய்ய அழைக்கப்படுகின்றது என்றும், கடவுளால் எல்லாம் முடியும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து அமைதிக்காக செபிக்க வேண்டும் என்றும் கர்தினால் பியத்ரோ பரோலின் கூறினார்.

ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை உக்ரைனின் பெர்டிகீவ் தூய மரியன்னை தேசிய திருத்தலத்தில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றியபோது கர்தினால் பரோலின் இவ்வாறு கூறினார்.

இடைவிடாத நமது செபத்தினால் கடவுளது வழியை விட்டு விலகி இருப்பவர்கள் சுயவிருப்பத்திற்கு அடிமைகளாக மாறியவர்கள் வன்முறை மற்றும் மரணத்தை விதைப்பவர்கள், மனித மாண்பை சீர்குலைப்பவர்கள் ஆகியோரின் இதயத்தை கடவுள் நமது தொடர் செபத்தின் வழியாக மாற்றுவார் என்றும் கூறினார் கர்தினால் பரோலின்.

இறைவாக்கினர் எலியா நூலிலிருந்து வாசிக்கப்பட்ட முதல் வாசகத்தில் கர்மேல் மலையில் ஆண்டவர் பாகால் தெய்வத்தை வழிபடுபவர்கள் முன் தன்னை வெளிப்படுத்திய நிகழ்வை சுட்டிக்காட்டி மக்களுக்கு செய்தி வழங்கிய கர்தினால் பரோலின் அவர்கள், வானத்திலிருந்து வந்த நெருப்பானது மனித இதயங்களின் மாற்றத்தையும், உள்ளார்ந்த இதயத்தை மாற்றும் அருளின் நெருப்பையும் அடையாளப்படுத்துகின்றது என்று கூறினார். பேராசை, வீண்பெருமை, இன்பம் ஆகிய மூன்று உணர்வுகளால் நம் அறிவாற்றலானது குருடாகிப்போகிறது என்ற பண்டையகால ஆசிரியரின் கருத்தை எடுத்துரைத்த கர்தினால் பரோலின், இத்தகையக் கொடிய நோய்களிலிருந்து நம்மைக் குணப்படுத்தி, கல்லான இதயத்திற்குப் பதிலாக தசையுள்ள இதயத்தை நாம் பெற விண்ணக மருத்துவராகிய இறைவனிடம் மன்றாட வேண்டும் என்றும் கூறினார்.

மனிதரால் ஆகாதது கடவுளால் ஆகும், கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை என்று கபிரியேல் வானதூதர் வாயிலாக கூறப்பட்ட இறைவார்த்தையை சுட்டிக்காட்டிய கர்தினால் பரோலின் அவர்கள், போரின் தீவிரங்கள் அதிகரித்து வரும் இச்சூழலில், கடவுள் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடக் கூடாது என்றும் கூறினார். போரின் பயங்கரங்கள், பல உயிரிழப்புகள், பொருள்சேதங்கள், பாரம்பரிய இடங்களின் அழிவுகள் போன்றவற்றினால் ஏற்படும் துயரமானது நமது இறைநம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் போதும், நமது கைகள் தளர்ந்து தீமையின் கை மேலோங்கி இருக்கும் போதும், நாம் நினைவில் கொள்ளவேண்டியது மனிதரால் இயலாதது கடவுளால் இயலும் என்ற இறைவார்த்தையே எனக் கர்தினால் பரோலின் கூறினார். தூய கன்னி மரியா தனது திருமகன் இயேசுவோடு உடன் பயணித்து, அவரது துன்பத்தில் பங்கேற்று, எவ்வாறு உயிர்ப்பின் மகிழ்வைப் பெற்றுக்கொண்டாரோ அதுபோல நாமும் அவரது உயிர்ப்பின் மகிழ்வை அடைவோம் என்ற உறுதியுடன் வாழ வேண்டும் என்றும் அமைதிக்காக அன்னை மரியின் பரிந்துரையைத் தொடர்ந்து நாடவேண்டும் என்றும் கர்தினால் பரோலின் கூறினார்.

# தாழ்ச்சியுள்ள மேய்ப்பரான அருளாளர் ஸ்தேஃபனோ துவாகி



அருளாளர் ஸ்தேஃபனோ துவாகி தாழ்ச்சியுள்ள மேய்ப்பர், கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய தலத்திருஅவைகளுக்கிடையே பாலமாக விளங்கியவர் என்றும், மாரனை வழிபாட்டு முறை புத்தகங்கள் பலவற்றை பாரம்பரியம் மற்றும் கத்தோலிக்க உண்மைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தார் என்றும் கர்தினால் மர்செல்லோ செமெராரோ கூறினார். ஆகஸ்ட் 2 வெள்ளிக்கிழமை மாலை லெபனோனின் *Bkerkh* ஆலயத்தில் ஸ்தேஃபனோ துவாகி அவர்கள் புதிய அருளாளராக உயர்த்தப்பட்ட திருப்பலியில் ஆற்றிய மறையுரையின்போது அருளாளர், மற்றும் புனிதர்களாக உயர்த்தப்படும் வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் மார்செல்லோ செமெராரோ இவ்வாறு கூறினார். 1650 ஆம் ஆண்டில், தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்று லெபனானுக்குத் திரும்பிய அருளாளர் ஸ்தேபனோ அவர்கள், 1655ஆம் ஆண்டு ஏப்ரல் 3 லிருந்து குழந்தைகள் குறிப்பாக ஏழைகள் மற்றும் அனாதைகளுக்கு கற்பிக்கத் தொடங்கினார் என்றும், அக்குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றினை நிறுவியவர் என்றும் கூறினார். ஆயராக இருந்து தனக்கு கீழ் உள்ள மக்களை நன்கு பராமரித்து வந்தவர் அருளாளர் ஸ்தேபனோ என்றும், மரியாதை, புகழ் போன்றவற்றை எதிர்பார்க்காது தாழ்ச்சியுள்ளவராகவும் சமூகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் வலிமை மற்றும் துணிவுள்ளவராகவும் திகழ்ந்தவர் என்றும் கூறினார் கர்தினால் செமரேரோ. எளிமை, நிதானமுள்ள வாழ்க்கை, துறவு, உலக பற்றின்மை, கடவுளை நாடுதல் போன்ற நற்குணங்கள் கொண்டவராக திகழ்ந்தவர் அருளாளர் ஸ்தேபனோ என்றும் உண்மையான மற்றும் ஆழமான செல்வத்தைத் தேடுவதற்காக வீணான மற்றும் மாயையான செல்வங்களிலிருந்து விடுபடுங்கள் என்று தன் வாழ்வால் வலியுறுத்தியவர் என்றும் கூறினார் அருளாளர் ஸ்தேஃபனோ துவாகி இறந்து 400 ஆண்டுகளுக்குப் பின் அவர் அருளாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆகஸ்ட் 2 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற அருளாளர் பட்ட விழா திருப்பலியில் ஏறக்குறைய 13000 இறைமக்கள் பக்தியுடன் கலந்துகொண்டனர்.

# செபத்தில் வளர்வோமா? ஓர் உளவள ஆன்மீகப் பயணத்தில் எனது தேடல்

கரவையூர்ச் செல்வம்



(முன் இதழ் தொடர்ச்சி)

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டி பவுல் உருவகத்தில் பேசினார் என்று குறிப்பிட்டிருந்தேன். அதன் அர்த்தம் என்ன?

### இன்னமும் புட்டிப் பாலா?

குழந்தையாக இருந்தபொழுது தாய்ப்பால் குடித்தாய். அது தேவை. அது ஆரோக்கியமானது. குழந்தை வளரும் பொழுது, தாய்ப்பாலை விட்டு, பால்புட்டியில் பால் குடிக்க ஆரம்பிக்கும். இதுவும் அந்தப் பராயத்துக்குத் தேவை. மேலும் குழந்தை வளரும் பொழுது, பால்புட்டியை விட்டு ஒரு பாத்திரத்தில் (கிளாஸ்,கப்) பால் ஆரம்பிக்கும் வேளை சிறிது சிறிதாகத் திடமான உணவை உண்ண ஆரம்பிக்கின்றது. இதை ஒரு வளர்ச்சிப் படிமுறை என்று சொல்லலாம். இதுதான் மனித வளர்ச்சி. முரணாக பால் புட்டியிலேயே பால் குடித்துக்கொண்டிருந்தால் அந்தநிலையில் ஒரு தேக்கம் ஏற்படும். அதனால், திடமான உணவை உண்ண அக்குழந்தை முயற்சிக்காது. புட்டிப்பாலையே அருந்தியவர்கள் அதையே ஒரு பழக்கமாக்கி விட்டால், அதுவும் அதில் ஒரு திருப்திகளைக் கண்டு விட்டால், அந்தத் திருப்தி ஆரோக்கியமற்றதாக இருந்தாலும் கூட அத்திருப்திக்கு அடிமையாகி விடுவோம். இதையே நான் *prayer holic* என்று அழைக்கின்றேன். அடிமை அடிமை தான்.

புட்டிப்பாலைக் குடித்து வளரமுடியாது. வளரும் குழந்தைக்கு மேற்கொண்டுவளரத் திடமான உணவு தேவை.

இந்த உருவகத்தை செபத்திற்கு ஒப்பிட்டுப் பார்த்தால் - நீங்களும் நானும் செபங்களை மனப் பாடம் செய்து, வாய்ச் செபமாக செபிக்கின்றோம். அடுத்த படியாக, குழந்தை, வளரவளர, வளர்ச்சிக்கேற்ப செபமுறையும் மாறவேண்டும். மூன்றாவது கட்டமாக, கடவுளை மகிமைப்படுத்தும் செபங்களைச் சொல்ல ஆரம்பிக்கின்றோம். ஆயினும், இதுவும், வாய்ச் செபந் தான். அடுத்த கட்டச் செபநிலைக்கு நாம் பயணிக்க வேண்டும். இதையே பவுல் சொல்வதாக நான் நினைக்கின்றேன்.

### இறைவேண்டல்

இந்த ஆண்டை இறைவேண்டல் ஆண்டாகத் தான் போப் பிரான்சிஸ் அவர்கள் பிரகடனம் செய்தார். இந்தத் தலைப்பு நற்செய்திலேயே உள்ளது. மத்தேயு எழுதிய நற்செய்தியில், ஆறாவது அதிகாரத்தில் ஐந்தாம் வசனத்துக்கு முன்னர் இந்த உபதலைப்பு உண்டு. இயேசு என்ன சொன்னார்?

நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்று கொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன், (மத்.6:5). உறுதியாக இயேசு சொல்லியிருக்கிறார்!. இயேசு கடினமான வார்த்தையைப் பயன்படுத்தினார். வெளிவேடக்காரர். மேலும், மக்கள் பார்க்க வேண்டுமென்று இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள்.

இப்பொழுது சொல்லுங்கள். நீங்கள் எங்கே நின்று செபிக்கிறீர்கள்? எப்படிச் செபிக்கிறீர்கள்? இது இயேசுவின் சவால்.

மேலும், இயேசு தொடர்ந்து சொன்னார்: நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத் தவரைப்போலப் பிதற்ற வேண்டாம்: மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கு முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். இயேசு இவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லிய பின்னரும் நாம் என்ன செய்கின்றோம்? எங்கள் வாய்ச் செபத்திலேயே தங்கிவிட்டோமா? நிறைய, நிறைய மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே நாம் செபிக்கின்றோமா? மற்றவர்கள் பார்க்க வேண்டுமெனக் கோவிலுக்கு போகின்றோமா? இல்லை ஒரு கட்டாயத்தின் நிமித்தம் கோவிலுக்குப் போகின்றோமா? இந்தக் கட்டாயம் உள்வாங்கப்பட்டு அதுவே என்னை அடிமைப்படுத்தி விடுகின்றதா? ஒரு கட்டத்தில், நான் வாயால், சொல்வதற்கும் எனது எண்ணங்களுக்குமிடையே ஒரு பாரிய இடைவெளி உருவாகிச் செபத்தை அர்த்தம் இல்லாமல் ஆக்கிவிடுகின்றது. கிளிப்பிள்ளை போன்று மனப்பாடம் செய்து திருப்தி திருப்பிச் சொல்லுகின்றோம். இதைத்தான், இயேசு பிதற்ற வேண்டாம் என்றார். இப்படிப்பட்ட செபத்தில்தான் எனக்கோர் அதிருப்தி தோன்றியது. அத்துடன், இயேசு எதைச் செய்யவேண்டாம் என்று சொன்னாரோ, அதையே பலமடங்காக்கி நாம் செய்கின்றோமே! ஏன்? எனக்கு தெரியாது.

### ஏதோ ஒன்று இல்லை!

பீட் கிறிவித்ஸ், ஓர் ஆங்கில நாட்டு பெனடிற்றின் சபைத்துறவி, மேற்கத்தைய நாட்டுச் செபத்தையிட்டுத் தனது நூலில் எழுதினார்: ஆராதித்தல், மகிமைப்படுத்தல், விண்ணப்பித்தல், மன்னிப்புக் கேட்டல், நன்றி கூறுதலுடன் செபம் திருப்தி அடைகின்றது. மேலும் அவர் கூறினார்: மேல் நாட்டிலும், மேல் நாட்டுத் திரு அவையிலும் ஏதோ ஒன்று இல்லாமல் போய்விட்டது. ஏதோ ஓர் இழப்புண்டு. மனிதரைப் பாகுபடுத்தி, ஒருபக்க வளர்ச்சி கொண்டுள்ளதாக அவர் உணர்ந்தார். மேல்நாட்டு செபமுறை மனிதரைப் பாகுபடுத்தி, ஒரு பக்க வாழ்வை வாழ முயல்கின்றோம். இதில் முழுமை இல்லை. *(Marriage of the East and the West, 1976).* இப்படிப்பட்ட ஒரு செபமுறையைத் தான் மேல்நாட்டுக் குருக்களும் துறவிகளும் எங்கள் நாடுகளுக்கு இறக்குமதி செய்தார்கள். நாமும் காலம்காலமாக இந்தச் செபமுறையையே பழகி வருகிறோம். இயேசு சொல்லியதை புறந்தள்ளி விட்டோம். நான் ஏற்கனவே கூறிய எனது அதிருப்திக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ஆனால், அந்த நேரம் எனது அதிருப்தியை அடையாளங்காண முடியவில்லை. அப்பொழுதிருந்த ஆன்மீக வழிகாட்டிகள் (இன்று, இவர்களை நான் ஆன்மீகப் பயணத்தில் உடன் பயணிகள் என்றே அழைக்கின்றேன்), எனக்கு உதவக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இன்றுகூட, நான் குறிப்பிடும் ஒருவருடைய ஆன்மீகப்பயணத்தில் உடன் பயணிக்கக் கூடியவர்கள் பெரும்பாலும் இல்லை என்று கூறினால் அது யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வோர் மறுக்கமாட்டார்கள். திருஅவையில் உள்ள சில வறுமைகளுள் இதுவுமொன்று.

பீட்கிறிவித்ஸ் கோடிட்டுக்காட்டியது

இருமைவாத மென்பதில் ஐயமில்லை. இக்கட்டத்தில் நான் தேட ஆரம்பிதேதன். செபிப்பதில் அர்த்தம் உண்டா? அர்த்தமில்லாத ஒன்றைத் திருப்பித் திருப்பிச் செய்வது மனிதமல்ல.

**திறந்தமனம்**

இத்தேடலில் நான் சந்தித்த ஒரு நுல் - தொமஸ்கிறீன் எழுதிய இறைவன் பால் திறந்த மனமுடையவராக இருப்பது, செபநிலையில் இது ஓர் வளர்ச்சி. ழிநநெளள வழ பழன.சாமுவேலை ஆண்டவர் அழைத்தார். சாமுவேல் ஏலிதான் அழைக்கிறார் என்று எண்ணி, ஏலியிடம் ஓடினான். இவ்வாறு மூன்று முறைகள் சாமுவேலுக்கு ஓர் அழைப்பு வந்தது. ஏலி இறுதியாகப் புரிந்து கொண்டார். ஆகவே, இன்னுமோர் முறை இந்த அழைப்புக் கேட்டால், என்ன செய்யவேண்டுமென்று கேளும், என்று ஏலி சாமுவேலுக்கு சொன்னார். சாமுவேலுக்கு மீண்டும் அழைப்புக் கேட்டது. ஏலி சொல்லியவாறு, சாமுவேல் ஆண்டவர் குரல் கேட்டு, சாமுவேல் சொன்னார்: பேசும், உம் அடியான் கேட்கிறேன், (1சாமுவேல்.3:4-10). இந்த நிகழ்வில் ஒரு சில செய்திகள் உண்டு. முதலாவது, கடவுளுக்கும் சாமுவேலுக்கும் இடையில் ஏலி தரகராகவோ அன்றேல் இடையூறாகவோ இருக்கவில்லை. ஒருவருடைய ஆன்மீகப் பயணத்தில் உடன் பயணிப்பவர், கடவுளுக்கும், கடவுள் அழைத்த நபருக்கும் இடையில் ஒரு தரகராகவோ, ஆண்டவரின் குரலைத் தான் கேட்டமாதிரித் தனது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப, தனது சார்புகளுக்கேற்ப எடுத்துரைப்பது உடன் பயணியின் பணியல்ல. இது, தவறான வழிநடத்தலாகவே அமையும்.

இரண்டாவது, ஆண்டவன் குரல் கேட்டதும், சாமுவேல் பேச ஆரம்பிக்கவில்லை. நீர் பேசும், உம் அடியான் கேட்கின்றேன். செபத்தில் இன்னுமோர் படி வளர்ச்சி, இந்நிலை. இறைவன் குரலுக்கு நான் செவிமடுக்கிறேன். அந்தத் தெய்வீகக் குரலைக் கேட்க, நான் திறந்த மனமுடையவராக இருத்தல் அவசியம். இது அவ்வளவு சுலபமானதல்ல. திறந்த மனமென்று சொன்னால், நான் கேட்க விரும்புவதைக் கேட்பதல்ல, வடிகட்டிக் கேட்பதல்ல, மறைமுக விருப்புக்களுடன் (யுபநனெய) கேட்பதல்ல, மனதில் எந்தவிதமான எண்ணப்பதிவுகள், உணர்ச்சிப் பதிவுகள் இல்லாத ஒரு வெறுமையான நிலையில் (வயடிரடய சயளய) நின்று செவிமடுப்பதுதான் திறந்த மனச் செபம்.

**பிதற்றல்**

எங்கள் செபத்தை பாருங்கள். எம்மில் பெரும் பாலானோர் சொல்வது என்ன? கடவுளே, கொஞ்சம் அமைதியாக இரும். ஒன்றும் பேசாதேயும். உம் அடியானைப் பேசவிடும். உண்மைதானே? அத்துடன் நின்று விடமாட்டோம். உம் அடியான் உமக்குச் சொல்வதற்கு நிறைய உண்டு. பொறுமையாகக் கேளும். இதைத்தான், இயேசு சொன்னார்: இறைவனிடம் வேண்டும் பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம்: மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்களை நினைக்கிறார்கள். ஆகவே, முதலில் பிதற்றுவதை நிறுத்துவோமா? எங்கள் கோவில்களில், பயங்கரப் பிதற்றல்கள் இடம்பெறுகின்றன. இது போதாதென்று அந்தப் பிதற்றல்களை ஒலிபெருக்கி மூலம் சுற்றும்சூழலை ஒலியால் மாசுபடுத்துகின்றோம்.

பல தடவைகளில் எங்கள் வேண்டுதல் கடவுளுக்குக் கட்டளையிடுவது போல இருப்பதும் உண்டு. நாம் எமது செபத்தில் சொல்லாமல் சொல்லுகிறோம். கடவுளே! உமது திட்டத்தை மாற்றி, எனது திட்டத்தை அமுல்படுத்தும். இதையும் செபந்தான் என்று வாதிடுவோர் இல்லாமல் இல்லை. இறைத்திட்டம் என்னவென்று உய்த்துணர முன்னரே தங்கள் திட்டங்களை செபமாக்குவோர், இவர்கள். இது, உண்மையான செபம் அல்ல பிதற்றல்

**அரசியல் கண்ணோட்டம்!**

இயேசு பன்னிருவரைத் தம்முடன் வருவதற்கு அழைத்ததை நற்செய்தி கூறுகின்றது. இயேசு அவர்களை அழைத்த காரணம் வேறு, அவர்கள் இயேசுவின் அழைப்பைப் புரிந்து கொண்ட முறை வேறு. இயேசுவின் அழைப்பு சீடத்துவத்திற்கு. ஆனால், அவர்களோ, இயேசுவின் அழைப்பை ஓர் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து, உரோமை இராச்சியத்திற்கு எதிராகப் போராடி, இஸ்ராயேலில் ஒரு சுயஆட்சியை நிறுவ ஓர் போராட்ட இயக்கத்திற்கு அழைப்பெனத் தங்கள் மறைமுகத் திட்டத்துடன் இயேசுவைப் பின் சென்றார்கள். அதனாலேயே, பதவி ஆசைக்கு அடிமைப்பட்டார்கள். இதையும் நற்செய்தி எடுத்துக் கூறுகின்றது. இறுதியில் நடந்ததென்ன?

தவறான நோக்கங்களுடன், அன்றேல் மறைமுகத்திட்டத்துடன் ஓர் அமைப்பில், அல்லது ஒரு கட்சியில், அல்லது ஒரு சபையில் சேரும் பொழுது விளைவுகள் விபரீதமாகும். அதனாலேயே, இயேசு ஆழ்வோரால் கைது செய்யப்பட்டபொழுது, ஒருவன் காட்டிக் கொடுத்தான் (நோக்கங்கள் வேறாக இருந்தாலும்), இன்னொருவன் இயேசுவை மறுதலித்தான். கல்வாரிப்பாதையில் யாருமே உடன் பயணிக்கவில்லை, கல்வாரியில் மட்டும் ஒருவன் விசுவாசத்தோடு நின்றான்.

# அணுசக்தி வளர்ச்சி குறித்து திருப்பீடம் ஆழ்ந்த கவலை!



ருமேனியாவில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க B52 குண்டுவீச்சு விமானங்கள் (ANSA)

ஐக்கிய நாடுகள் அவையின் ஜெனிவா தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அணு ஆயுதப் பரவல் தடை குறித்து உரையாற்றிய பேராயர் Ettore Balestrero, அணு ஆயுதங்களால் இருத்தலுக்கான அச்சுறுத்தல் பற்றியும் எச்சரித்தார். அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் 2026-ஆம் ஆண்டின் மறுஆய்வு மாநாட்டின் இரண்டாவது ஆயத்தக் குழு-அதிகாரப்பூர்வமாக தலைப்பிடப்பட்ட விவாதத்திற்கு கூடியிருந்தவர்களிடம் இவ்வாறு தெரிவித்த ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அனைத்துலக அமைப்புகளுக்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் Ettore Balestrero, அணுசக்தி வளர்ச்சி குறித்து திருப்பீடம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் கூறினார். அணு ஆயுதங்கள் என்பது, ஓர் இருத்தலுக்கான அச்சுறுத்தல் என்றும், இது தற்போதைய பதட்டமான போர்த்திறன் சார்ந்த மற்றும் நிகழ்ந்து வரும் நவீனமயமாக்கல் மற்றும் அணு ஆயுதங்களின் விரிவாக்கத்தால் மோசமடைந்துள்ளது என்றும் பேராயர் தனது உரையில் குறிப்பிட்டார் Balestrero. அணு ஆயுதங்கள் தொடர்பான இராணுவ செலவினங்களின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் அதன் வளர்ச்சி அதிகரிப்பு மற்றும் அவற்றின் சாத்தியமான பயன்பாடு பற்றிய அச்சுறுத்தல்கள் இரண்டிலும் திருப்பீடம் அக்கறை கொண்டுள்ளது என்று கூறிய பேராயர் Balestrero, இத்தகைய நடவடிக்கைகள், ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் அவமானம் என்றும் சுட்டிக்காட்டினார்.

அணு ஆயுத பரவல் மற்றும் தடை, நேர்மையான உரையாடல், அணு ஆயுதங்களுக்கு செலவிடப்படும் பணத்தை மனிதாபிமான திட்டங்களுக்காகச் செலவிடல் ஆகிய மூன்று பரிந்துரைகளையும் திருப்பீடம் முன்வைக்க விரும்புவதாகக் கூறி தனது உரையை பேராயர் Balestrero நிறைவு செய்தார்.

கனகத்தூதனை இப்போது e-paper ஆகவும் வாசித்திடலாம்.

தங்கள் பிரதிகளுக்கு canacathuthan@gmail.com or 416 300 7026


INVITATION
OUR LADY OF FATIMA TAMIL CHAPLAINCY
புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியகம்
We cordially invite you to
மறைகாத்த மாவீரன்
MARAI KAATHA MAAVEERAN
தென்மோடி நாட்டுக்கூத்து
OUR CHIEF GUEST: HIS GRACE,
MOST REVEREND FRANCIS LEO
Archbishop of Toronto
ரொறன்ரோ உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு பிரான்சிஸ் லீயோ
அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றார்
சனிக்கிழமை ஆவணி 24, 2024 | மாலை 6:30 மணி
SATURDAY AUGUST 24, 2024 | 6:30 PM
JOHN PAUL II POLISH CULTURAL CENTRE
4300 Cawthra Rd., Mississauga, ON L4Z 1V8
அனைவரையும் அழைக்கின்றோம்



# மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சூருப முடிசூட்டு நிகழ்வும் அதன் பின்புலமும்

(முன் இதழ் தொடர்ச்சி)

அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன்

### மணிமுடி சூட்டு நிகழ்விற்கு ஏற்பட்ட எதிர்பாராத தடங்கல்கள்

ஆயர் யூல்ஸ் புறோ அமதி, நீண்ட காலம் காத்திருந்த மணிமுடி சூட்டு நிகழ்வை யூலை 1922இல் நடத்த முடியாதவாறு பெரும் துயரச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றன. 12 பெப்ரவரி ஏற்பட்ட சீரற்ற காலநிலை, சூறாவளி, கடும் மழை, வெள்ளப்பெருக்குக் காரணமாக ஆலயச் சூழல் எங்கும் வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. மடு ஆலயமும் பங்கு மனையும் மட்டுமே நீர்மட்டத்திற்கு மேல் காணப்பட்டன. கட்டடங்கள் இயற்கையின் சீற்றத்திற்கும் தாக்கத்திற்கும் ஈடுகொடுக்கமுடியாத நிலையில் முற்றாக இடிந்து வீழ்ந்தன. இவை அனைத்திற்கும் மேலாக, மடு ஆலயத்தில் ஒன்றுகூடும் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்குத் தேவையான நீரை வழங்கும் விசாலமான குளம் உடைப்பெடுத்துக் குளத்துநீர் முற்றாக வெளியேறியது இந்நிலையில், ஏற்கனவே திட்டமிட்ட படி 02 யூலை 1922இல் மணிமுடிசூட்டு நிகழ்வை நடத்த முடியாத நிலையில், முடிசூட்டு நிகழ்வைப் பின்போட வேண்டிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. மேலும், பெப்ரவரி 15இல் மாதோட்டம் முழுவதும் பேரழிவிற்கு உட்பட்டது. எங்கும் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டது. மணிமுடி சூட்டு நிகழ்வைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்னும் எதிர்பார்ப்புடன் நீண்டகாலம் காத்திருந்த ஆயருக்கு இது பெரும் ஏமாற்றமாகவும் கசப்பான அனுபவமாகவும் மாறியபோதும் ஆயர் யூல்ஸ் புறோ அமதி இச்சம்பவத்தைத் துணிவுடனும், சகிப்புத் தன்மையுடனும் ஏற்றுக் கொண்டார்.

### மீண்டுமோர் தடங்கல்

மருதமடு மாதாவின் திருச்சூருபத்திற்கு மணிமுடிசூட்டு நிகழ்வைச் சிறப்பாக நடத்துவதற்கு ஆயர் யூல்ஸ் புறோ அமதி பல திட்டங்களை முன்னெடுத்த போதும் தொடர்ச்சியாகப் பல தடைகளை எதிர்நோக்கினார். எனினும் எந்த நிலையிலும் மனம் சலிக்காது எல்லாத் தடைகளையும் துணிவுடன் எதிர்கொண்டார். இந்த நிகழ்வுகள் பற்றி ஆயர் யூல்ஸ் புறோ அமதி அவர்களின் பார்வை முற்றும் மாறுபட்டதாக அமைந்திருந்தது.

ஆயர் தமது பார்வையை 03 டிசம்பர் 1922இல் எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சூருபத்திற்கு மணிமுடி சூட்டுவதற்குத் திரு ஆட்சிப்பீடம் எங்களுக்கு அனுமதி வழங்கியதிலிருந்து தீமையின் சக்தி எங்களுக்குத் தடையாகச் செயற்பட்டு இந் நிகழ்வைப் பின் தள்ளிக் கொண்டு செல்கின்றது. கடந்த வருடம் மடுக்குளம் உடைப்பெடுத்த தால் மணிமுடிசூட்டு நிகழ்வைப் பிற்போட வேண்டிய துன்பகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இப்பொழுது மற்றுமோர் துன்பகரமான அழிவின் செய்தி எங்களை வாட்டுகின்றது. கடும் மழை காரணமாக 19 நவம்பர் 1922 இரவு ஆலயத்தின் முகப்பு முற்றாக இடிந்து வீழ்ந்து ஏற்படுத்திய சேதத்தினால் தற்போது ஆலய முகப்பு இடி பாடுகளின் குவியலாகக் காட்சியளிக்கின்றது. இதனால் ஏற்பட்ட முழுச் சேதமும் அண்ணளவாகப் பத்தாயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பாரிய இழப்பின் மத்தியிலும் எந்தவித உயிர் ஆபத்தும் ஏற்படவில்லை என்பது பெரும் ஆறுதலாக அமைகின்றது.

இத்துயர நிகழ்வு பெரிய திருவிழாக் காலங்களில் இடம்பெற்றிருக்குமாயின் அதன் விளைவை எண்ணும் போது கற்பனையில் கூட நினைக்க முடியாத நிலைக்கு உடல் புல்லரிக்கின்றது. இதில் மரியன்னை எங்கள் மீது காட்டிய அளவு கடந்த அன்பையும் பாதுகாப்பையும் நினைந்து, இத்துன்ப நிகழ்வின் மத்தியிலும் எங்களைக் காத்தமைக்காக அன்னைக்கு என்றும் நன்றி செலுத்துகின்றோம்.

மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்திற்கான மணிமுடிசூட்டு விழாவை வெகு விமரிசையாக நடத்த வேண்டும் என்பது எனது ஆழ்ந்த விருப்பம். அதற்கு

முன்பு ஆலயத்தையும் ஏனைய திருத்த வேலைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது எங்கள் விருப்பமாயிருப்பினும் இவை எங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகும். எனினும் முடி சூட்டு நிகழ்வு எதிர்வரும், 02 யூலை 1923 இடம்பெறும். ஆலய முகப்பின் மீள் கட்டுமானத்திற்கும் போட்டிக்கோ மண்டபத்தை அமைப்பதற்கும் எதிர்காலத்தில் கூடும். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வசதியான முறையில் பங்கு கொள்வதற்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ள மடுத்திருப்பதியில் கூடும் பக்தர்களிடம் வேண்டிக்கொள்வது ஏழையான யாழ்ப்பாண ஆயர் இப்பணியை மேற்கொள்வதற்குத் தாராளமான நிதி உதவியை வழங்குங்கள். போதிய நிதியுதவி கிடைக்குமிடத்து முகப்பின் மீள்கட்டுமானத்தை மேற்கொள்வதோடு போட்டிக்கோவையும் கட்டுவதற்குப் போதிய கால அவகாசம் உண்டு. எனவே, மருதமடு அன்னையின் பெயரால் அன்னையின் பக்தர்கள், எங்கள் எல்லா நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடம் நாம் வினயமாகக் கேட்டுக்கொள்வது, இந்த நற்பணிக்குத் தங்கள் தாராள பங்களிப்பை வழங்கி இறைவனின் சிறப்பான ஆசீரைப் பெற்றுக் கொள்வதுடன், யாழ்ப்பாண ஆயர் என்றும் உங்களுக்கு நன்றிக் கடனுள்ளவராக விளங்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மிட்லாண்ட் திருத்தலத்தில் ஒரு பங்கேற்பாளனின் குரல்

அருட்பணி அமலதாசு தென்சிங்



திரு எலியாஸ் லம்பேட், திரு பிலிப் ஆனந்தம், மற்றும் திரு ஜூட் நிக்கோலஸ் போன்ற அருமையானமனிதர்களின் நட்ப்பால் ஜூலை 20, 2024 அன்று மிட்லாண்ட் மறைசாட்சியர் திருத்தல வளாகத்தில்நடைபெற்ற தமிழீழமக்களுக்கான திருப்பலியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததை மாபெரும் கடவுளின்கொடையாக எண்ணி நன்றி கூறுகிறேன்.

சிறுவயதுமுதல் தமிழீழ தமிழ் மக்களின் கொடுந்துயர் நிகழ்வுகளையும் வீரப்பெரும் செயல்களையும் உணர்ந்துவளர்ந்த தமிழ் நாட்டைச்சார்ந்த ஒரு எளிய அருட்பணியாளன் நான். இறையியல் படிக்கும்பொழுது



திருச்சியின்அருகில் வாழவந்தான் கோட்டை அகதிகள் முகாமில் தமிழ் மக்களை சந்தித்தேன். அவர்கள் பேசிய தமிழும்நட்புறவு பாராட்டிய விதமும் தமிழ் உறவுகள் மீதான நெருக்கத்தை அதிகப்படுத்தியது. இறையியல்ப்படிப்பின்ஆய்வுக்கட்டுரைக்காக விவிலிய ஒளியில் தமிழீழ அகதிகள் வாழ்வை ஆய்ந்துணர்ந்தேன். தமிழீழக்கனவோடுவாழும் மக்களோடு நட்புறவு பாராட்டினேன். அதன் விளைவு இன்று கனடாவில் சூசேமரி எனும்மறைமாவட்டத்தில் பணியாற்றும் போது மேற்குறிப்பிட்ட நல்ல மனிதர்களின் தொடர்பால்



மிட்லண்ட்மறைசாட்சியர் திருத்தலத்தில் தமிழீழ மக்களோடு திருப்பலியில் கலந்து கொள்ள வாய்ப்புக்கிடைத்தது.
சுமார் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்ட சமூக, பண்பாட்டு, அரசியல் நிகழ்வு இது, டோரண்டோ தமிழ்கத்தோலிக்க சமூகம் அருட்பணி பீட்டர் ஜித்தேந்திரன் தலைமையிலும் அருட்பணி சார்லஸ்கொலின்ஸ் உடனிருப்பிலும் ஒருங்கிணைந்த ஒப்பற்ற நிகழ்வு இது.

தமிழீழத்திலிருந்து வருகை புரிந்திருந்த அருட்பணி ஜீவா போல் அவர்கள் தலைமையில் திருப்பலிநடைபெற்றது. திருப்பலிக்கு முன்பாக தமிழீழத்தாயகத்தில் உயிர் நீத்த அனைவருக்கும் அஞ்சலிசெலுத்தப்பட்டது. மூன்று அருட்பணியாளர்கள் ஒளி ஏற்றி பெருந்திரள் மக்கள் சார்பான அஞ்சலி இறந்தஆன்மாக்களின் ஆசீரை நமக்கு பெற்றுத்தந்தது. அம்மூவரில் நானும் ஒருவனாக ஒளி ஏற்றியபோது ஒட்டுமொத்த தமிழீழ மக்களின் ஆன்மாவோடும் கலந்து கொண்ட உணர்வு கிடைத்தது. வாய்ப்பளித்தஅருட்தந்தையருக்கு நன்றி கூறுகிறேன்.



வருகைப்பவனியின் நிறைவில் இளம் சகோதரிகளின் நாட்டிய பிரசன்னம் அனைவரின் உள்ளங்களையும்இறைவன் பால் ஒன்றிணைத்தது. தமிழ் மக்களின் நிறை பக்தியை பாராட்டி திருத்தல அதிபர் வரவேற்றுநம்பிக்கை ஊட்டினார்.

தியாகம் செய்து புகழ் ஈட்டுங்கள் என அற்ப்புதமான மறை உரையை அருட்பணி ஜீவா போல் நிகழ்த்தினார். உயிர்த்தியாகத்தை வாழ்வு முழுவதும் வரலாறாக்க்கொண்ட தமிழீழ மக்களுக்கு மிகவும் பொருத்தமான மறைஉரையாக இருந்தது. நற்கருணை விருந்திலும் திருப்பலிக்கு பின் திருப்பண்ட ஆசீர் நிகழ்வுகளிலும் மக்கள்மிகுந்த பக்தியோடு கலந்து கொண்டனர். இறை உணர்வை இதயத்தில் கலந்திருக்க பாடகர் குழுவினர்வழிகாட்டினர்.

திருத்தலவளாகம் தமழ்க்கிராமமாக மாறி விட்டிருந்தது. குடும்பம் குடும்பமாக சமைத்து உறவுகளைஉபசரிந்துக்கொண்ட காட்சி கண்கொள்ளாதது. விருந்தோம்பல் விண்ணை எட்டியது, தமிழ் மணம் எங்கும்பரவிக்கிடந்தது. குறுக்குமறுக்குமாக வீதி அமைத்து விருந்து படைத்து தமிழீழ தாயகக்கனவை நெஞ்சுக்குள்தக்க வைத்துக் கொண்டனர். இழந்த உறவுகளை நினைத்து நெஞ்சுறுதி





கொண்டனர் தமிழீழஅருட்தந்தையரும் தமிழ்நாட்டு அருட்தந்தையரும் திருப்பலியை இணைந்து நிறைவேற்றியது நிறைவாகஇருந்தது சாதிமத பிரிவினைகள் கடந்து தமிழீழ மக்களாக இணைந்து நின்று இறை உணர்வை வளர்ப்பதுதேடிய கனவை நிறைவேற்றுவதற்காகத்தான். இறையுணர்வும் தமிழுணர்வும் கலந்து, மக்கள் வளம் பெறட்டும்,

- ஆமேன்

# மரியாவின் திருத்தலங்களுக்கான திருப்பயணம்

மெற்றகொரியில் அமைதியின் அன்னை, இத்தாலி லோறேற்றாவில் மரியாவின் பறக்கும் வீடு, பிரான்சின் லூர்து திருத்தலம், போர்த்துக்கல்லில் பத்திமா திருத்தலம் இவற்றோடு பதுவையில் தூய அந்தோனியார் திருத்தலம், ரோமையில் உலகப்புகழ் பெற்ற 5 பேராலயங்கள் வத்திக்கான் உட்பட திருந்தந்தையுடன் செபவழிபாடு, ரோமையில் பல ஏக்கர்களில் மறைக்காய் மரித்த ஆயிரக்கணக்கான இறையடியார்களின் நிலத்தடி கல்லறைக் குகைகள் இன்னும் பல புனிதமான இடங்கள்






# Pilgrimage to Marian Shrines

*Including Rome - V tic n - P du*

**May 12 - 25, 2025**

**Days of Reflection and Prayers. Time to relax and visit the Holy Places with the spiritual guidance. Receive God's blessing in an abundant way**





**ஜுபிலி ஆண்டில் மரியாவின் திருத்தலங்களுக்கும் உரோம், வத்திக்கான் பேராலயங்களுக்கும், தூய அந்தோனியார்திருத்தலத்துக்குமான திருப்பயணம் (ஜுபிலி ஆண்டில் பேராலயங்களின் தூய வாயிற்கதவுகள் ஊடாக சென்று சிறப்பானஆசி பெறுதல்)**

- **May 12, 2025**
  - ரோரன்ரோவிலிருந்து ஆரம்பமாகி இத்தாலியை அடைதல்
  - உரோமையில் திருத்தந்தை பிரான்சிசுடன் செபவழிபாட்டில் பங்கு பெறவும் மிக அருகில் அவரைப்பார்கவும் வாய்ப்புண்டு
  - தூய பேதுரு பேராலயம்,
  - திருத்தந்தையர்களின் கல்லறை
  - ரோமையில் உள்ள 5 அழகான பேராலயங்களையும் தரிசிக்கவும்
  - இலட்ச்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் 1 ஆம் 2 ஆம் நூற்றாண்டுகளில் மறைசாட்சிகளாகமரணித்து பல ஏக்கர் பரப்புகளில் நிலத்தடியில் புதைக்கப்பட்ட (Catacombs) தூய இடங்களைதரிசித்தல்
- **May 14, 2025**
  - பதுவை நோக்கிப்பயணம் தூய அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி
- **May 15, 2025**
  - அங்கோணாவை அடைதல்
  - மரியா வாழ்ந்த வானதூதர்களால் காவிச்செல்லப்பட்ட வீடு வைக்கப்பட்டிருக்கும் லொறேற்றாஆலயத்தை தரிசித்தல்
- **May 16, 2025**
  - மெற்றக்கொரியை அடைதல
  - இன்றைய நாட்களிலும் மரியன்னை தோன்றி காட்சிதரும் ஆறு காட்சியாளர்களை பார்க்கவும்அவர்கள் உரையைக்கேட்கவும் வாய்ப்புண்டு
- **May 19, 2025**
  - பிரான்ஸ் லூர்து திருத்தலம் நோக்கி விமானத்தில் பயணம்
  - திருப்பலி
  - சிலுவைப்பாதை
  - இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரம்
  - தூய பேர்னடேற் வாழ்ந்த இடங்களை தரிசித்தல்
  - புதிதாக லூர்து திருத்தலத்தை பற்றி வெளியிட்ட திரைப்படம்
  - அரும்பொருள் காட்சிச்சாலை பார்வையிடல்
- **May 21, 2025**
  - போத்துக்கல் பத்திமா அன்னையின் திருத்தலம் நோக்கி பயணம்
  - திருப்பலி
  - சிலுவைப்பாதை
  - இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரம்
  - அன்னை காட்சி கொடுத்த இடங்களை தரிசித்தல்
  - காட்சி பெற்றவர்களான தூய யசிந்தா, லூசியா, பிரான்சிஸ்கோ கல்லறைகளை தரிசித்தல்
  - இத்திருத்தலத்திற்கு திருத்தந்தையர்கள் அரசபரம்பரையினர் வழங்கிய விலைமதிப்பானபொருட்களை கொண்ட அருங்காட்சியகம் பார்வையிடல்
  - பத்திமா அன்னை காட்சி கொடுத்த வரலாற்று திரைப்படம்
- **May 25, 2025**
  - போத்துக்கல் லிஸ்பனில் இருந்து ரோரன்ரோவை வந்து அடைதல்

**Pilgrimage to the Marian Shrines, Rome and Vatican Cathedrals, and St. Anthony's Shrine during this Jubilee Year 2025 (Enter through the Holy doors of these Basilicas)**

- **May 12, 2025**
  - Departure from Toronto Pearson Airport to Rome (Italy).
  - Special Audience with Pope Francis and prayer service
  - Saint Peter's Cathedral,
  - Tomb of the Popes
  - Visit all 5 beautiful cathedrals in Rome
  - Visit the catacombs where hundreds of thousands of Christians died as martyrs in the 1st and 2nd centuries and were buried underground over acres of land.
- **May 14, 2025**
  - Visit Padua Shrine of Saint Anthony
  - Holy Mass
- **May 15, 2025**
  - Reaching Ancona
  - Visiting the Church of Loreto. For many centuries, tradition held that angels miraculously carried the Holy House (where Mary lived) from Nazareth to Loreto in 1294.
- **May 16, 2025**
  - Reaching Medjugorje
  - Visiting Blue Mountain and White Cross
  - Possibility of meeting the visionaries who receive messages from our lady continuously
- **May 19, 2025**
  - Air travel to Lourdes, France
  - Holy Mass
  - Stations of the Cross
  - Bath in the lourdes water
  - Candlelight procession at night
  - Visit Bernadette's house
  - Movie about Lourdes
  - Visiting the Art Gallery
- **May 21, 2025**
  - Traveling for Fatima
  - Holy Mass
  - Stations of the Cross
  - Candlelight procession at night
  - Visiting the places where our lady of Fatima gave the vision
  - Visiting the tombs of Saints Yacinda, Lucia, Francisco who received visions
  - Visiting the famous museum
- **May 25, 2025**
  - Departure from Lisbon Air port to Toronto







**திருப்பயண நாட்கள் ஒரு சிறப்பான ஆன்மீக பயணத்தின் சிறப்பான அனுபவம். இறைவனோடு, மரியாவின்அன்பிலும் அவரின் பரிவிலும் வாழும் இந்நாட்களை வாழ்வில் ஒருபோதும் மறக்க மாட்டீர்கள். அனைத்துவசதிகளும் உங்கள் எதிர் பார்ப்புக்கு மேலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விமானநிலைய வரிகள், செல்லும்நாடுகளுக்கான பயண ஒழுங்குகள், தங்கும் விடுதி, காலை மாலை உணவுகள், காட்சியக அனுமதி அனைத்தும்14 நாட்களுக்கும் can $4700 மட்டுமே பெப்ரவரி 1 ஆம் திகதிக்கு முன் $2400 டொலர்களும் ஏப்ரல் 15 க்கு முன் $2300 டொலர்களும் செலுத்தவேண்டும்.**
**மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் பிலிப் ஆனந்தம் அன்ரனி.**

**Package includes air travel, all local transportation, 4-star hotel accommodation with double occupancy, daily breakfast and dinner, and all entry fees. There will be guided tours with explanations available in both English and Tamil. Please note that lunch and medical insurance are not included. The total price is $4,700 ($2,400 paid before February 1st, 2025 and $2,300 paid before April 15th, 2025). Please call Philip Anantham Antony.**
**at 647 280 8984 or email antonymaha@gmail.com**





மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் ஆனந்தம் அன்ரனி
**Tel: 647 280 8984 or email: antonymaha@gmail.com**

Foundation of your financial freedom!



LIVE LIFE
FULLY COVERED

COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.
YOU & YOUR FAMILY

கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...

சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை
செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.

- Life Insurance
- Non-Medical Insurance
- Travel Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RESP - *Education Saving Plan*
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products *(Through Funeral Homes)*

Mega Financial Group
416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

Now Hiring
FULLTIME / PART TIME AGENTS

FASTEST GROWING INSURANCE AGENCY
Well Established Name / Multicultural Agents / Great Support

Call Raj Nadarajah for more info
416 666 1120

Assumption Life · Industrial Alliance · UL Mutual · Desjardins · Equitable Life of Canada · RBC Insurance · Canada Life · Manulife Financial · Unity Life of Canada · Union of Canada · Sun Life Financial · ASSURANT

# மருதமடு மாதாவின்...

11ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆயரின் கோரிக்கைக்கு மிகச் சாதகமாக மக்கள் செவிமடுத்தமையால் நன்கொடைகள் தாராளமாக வந்து குவிந்தன. இதைக் கண்ட ஆயர் மணிமுடி சூட்டு நிகழ்வைச் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் 02 யூலை 1923இல் நடத்துவதற்கான ஆர்வத்தோடு திட்டங்களைத் தயார் செய்தார்.

### மீண்டுமோர் சோகமான தடங்கல்

ஆயர் புறோ அமதி, ஆர்வத்தோடு திட்டங்களை முன்னெடுத்த நிலையில் இறைவனின் திருவுளம் முற்றும் எவரும் எதிர்பாராத விதமாக அமைந்தது. 20 ஜனவரி 1923, அன்று காலை ஆயர் புறோ அமதி, அவர்களின் அறையில் மாட்டப்பட்டிருந்த அவரது நிழற்படம் காற்றினால் கீழே வீசப்பட்டு வீழ்ந்து பல துண்டுகளாக உடைந்தது. இது ஓர் அபசகுனம் எனப் பலராலும் பேசப்பட்டது. சில நிமிடங்களில் ஆயரின் மரணச் செய்தி மக்களை ஆழாத்துயரில் ஆழ்த்தியது.

ஆயர் யூல்ஸ் புறோ அமதி மேற்கொண்ட அளப்பரிய சேவையின் பொருட்டு படைத்தவர் அவருக்கு நித்திய சம்பாவனையின் முடியைச் சூட்டுவதற்கு விண்ணகம் அழைத்துக் கொண்டார். வேகமாகப் பரவிய ஆயரின் திடீர் மரணச் செய்தி யாழ்ப்பாண மறைமாவட்டம் முழுவதையும் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியது. இப்பொழுது யாழ்ப்பாண மறை மாவட்டம் ஆயர் இன்றி வெற்றிடமாக இருந்தது.

### விமரிசையாக இடம்பெற்ற மணிமுடி சூட்டு நிகழ்வு

ஒரு வருடத்தின் பின்பு, 16 ஜனவரி 1924 அருட்பணி யோண் அல்பிரட் கியோமர் அமதி, யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். புதிய ஆயர் முதல் நிகழ்வாக, மறைந்த ஆயர் புறோ அமதி, அவர்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகிய மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்கு முடி சூட்டும் நிகழ்வை 02 யூலை 1924 மிக விமரிசையாகச் சிறப்பாக நடத்தினார். இச்சடங்கில் நேரடியாகப் பங்கு கொண்ட ஒருவர் தமது அனுபவத்தைக் கீழ்க்கண்டவாறு தமது நூலில் பதிவு செய்துள்ளார்.

02 யூலை 1924 இலங்கைக் கத்தோலிக்கருக்குப் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். இத்தினத்தில் மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டும் சடங்கு மிகவும் விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடந்தேறியது.

இதனால் இலங்கைத் திருஅவைக்குக் கிட்டிய மங்காப் புகழ் ஒருபுறமிருக்க, உலகிலுள்ள சிறந்த திருத்தலங்களில் ஒன்றாக மடுத் திருததலமும் அங்கீகாரம் பெறுகின்றது. உலகில் மரியன்னையின் சிறந்த திருத்தலங்களில் ஒன்றாக மருதமடுவை அங்கீகரித்ததன் மூலம், திருத்தந்தை இலங்கைக்குச் சிறப்பான கௌரவத்தை அளித்துள்ளார். உலகில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான திருத்தலங்களே இவ்வாறாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

02 யூலை 1924 இல் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் அன்ரனி கூறே அமதி, திருத்தந்தை 11ஆம் பயஸ் அவர்களின் பிரதிநிதியாக, ஏனைய ஆயர்களுடன் பெரும் எண்ணிக்கையிலான குருக்களுடனும் துறவிகளுடனும் இணைந்து, இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் வந்திருந்த பெரும் மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் புதுமைமிகு திருச்சுரூபத்துக்கு மணிமுடி சூட்டினர்.

அண்ணளவாக 300 ஆண்டுகளுக்கு மேலாக ஒதுக்குப் புறமான வன்னிக் காட்டுப் பகுதியில் சிறு கொட்டில் ஆலயத்தில் வணங்கப்பட்டு வந்த புதுமைமிகு திருச்சுரூபம் இன்று பொன்னாலும், வெள்ளியாலும் பளபளக்கும் நவரத்தினக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இந்த நிகழ்வு சுட்டி நிற்கும் ஆன்மீக அடையாளம் ஆழமான பொருள் பொதிந்த நிகழ்வாக விளங்குகிறது. இந்த வரலாற்று நிகழ்வானது மக்களின் விசுவாசத்தின் வெளிப்பாடாக விளங்குகின்றது.

திருவிழாவிற்கு முதல் நாள் அதாவது 01 யூலை 1924 மாலை இடம்பெற்ற வேஸ்பர் ஆராதனையில் அண்ணளவாக 100,000 மக்கள் கலந்து சிறப்பித்தனர். இதில் கண்டி ஆயர் பீட் பீக் மேயர் சிங்கள மொழியில் ஆற்றிய மறை யுரை பெரிதும் பாராட்டப்பட்டது. கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் மாலை வழிபாட்டைத் தலைமையேற்று நடத்தினார். யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்தந்தையர்களும் ஏனைய மறை மாவட்டங்களிலிருந்து வருகை தந்த அருட்தந்தையர்களும் கலந்து மாலை வழிபாட்டைச் சிறப்பித்தனர். வழிபாடு முழுவதும் இலத்தீன் பாடல்களாக அமைந்திருந்தன.

மறுநாள் அதாவது 02 யூலை காலைத் திருப்பலி ஆரம்பமாவதற்கு முன்பு மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் ஆடம்பரமாகப் பவனியாக எடுத்து வரப்பட்டு இதற்கென அலங்கரிக்கப்பட்ட மேடையிலுள்ள பீடத்தில் பூசிதமாக வைக்கப்பட்டது. கண்டி ஆயர் பீட் பீக் மேயர் தலைமையேற்றுத் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து மணிமுடி சூட்டு நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்புப் பேராயர், ஏனைய ஆயர்கள், அமலமரித்தியாகிகள்சபையின் பிரதித் தலைவர் (யுளளளைவயவெ ளுரிநசழைச புநநெசயட) மற்றும் ஏனைய பெரும் எண்ணிக்கையிலான குருக்களும் கலந்து கொண்டனர். திருப்பலியின் போது துத்துக் குடி மறைமாவட்ட ஆயர் திபூசியஸ் பீரிஸ் தமிழ்மொழியில் மறை யுரையாற்றினார்.

தொடர்ந்து பேராயர் சிங்கள மொழியில் மறையுரையாற்றினார். கொழும்புப் பேராயர், யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, மற்றும் தூத்துக்குடி ஆயர்கள் மற்றும், ஏனைய குருக்கள் இரு முடிகளையும் பவனியாக எடுத்து வந்தனர். ஆயருக்குரிய சிறப்பு விருதணிகளுடன் வருகை தந்த பேராயர் சிறிய முடியைக் குழந்தை இயேசு திருச்சு ரூபத்தின் தலையிலும் பெரிய முடியை மருதமடு அன்னை திருச்சுரூபத்தின் தலையிலும் சூட்டிய போது வானைப் பிளக்கும் அளவிற்கு வெடிச்சத்தங்களும், ஆலய மணியோசையும், மக்களின் மகிழ்ச்சி ஆர்ப்பரிப்பும், ஆரவாரங்களும் நெடு நேரம் நீடித்தது.பெரிய முடியானது, நகை ஆபரணங்களை அழகுற வடிவமைப்பதில் சிறப்பு அனுபவம் பெற்ற திறமையுள்ள பொற்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டது. முடியில் பொறிக்கப்பட்டிருந்த சிலுவை பளபளப்பான தோற்றத்தில் காட்சியளித்தது. முடி முழுவதும் தூய தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். முடியின் அடிமட்டம் மற்றும் முன் பகுதி இரத்தினம், மாணிக்கம் போன்ற உயர் பெறுமதியுள்ள கற்களினால் அழகுபடுத்தப்பட்டிருந்தது. பொதுவாக இவ்வாறான நிகழ்வுகளின் போது திருத்தந்தையின் அந்நாட்டிற்கான பிரதிநிதியே மணிமுடி சூட்டு நிகழ்வை நடத்துவர். எனினும் இலங்கைக் கான திருத்தந்தையின் பிரதிநிதி அவ்வேளையில் இல்லாத நிலையில், கொழும்புப் பேராயருக்கு இச்சிறப்புரிமை திருத்தந்தையினால் வழங்கப்பட்டது. *(S. Joseph Fernando, 1924 &1938, 20-23).*

### மணிமுடிசூட்டு நிகழ்வின் வெள்ளி விழா - 1949

முடிசூட்டு வெள்ளி விழாவைச் சிறப்பிக்கவும், ஆயர் கியோமர் அமதி அவர்களின் ஆயர் பணியின் வெள்ளி விழாவைச் சிறப்பிக்கவும் ஆயர் ஜே. எமிலியானுஸ்பிள்ளையின் வேண்டுகோளில் *“The Chronicle of the Sanctury of Our Lady of ஆயனார”* என்னும் வரலாற்று நூலை அருட்தந்தை ஏ.ஜே.பி. அன்ரனயினஸ் அமதி அடிகள் எழுதி, 1949இற்கு முன் வெளியிட எண்ணிய போதும் நூலின் ஆக்கப்பணி 1956ம் ஆண்டிலேயே நிறைவு பெற்றது.

02 யூலை 1949இல் மருதமடுச் செபமாலை மாதா புதுமைமிகு திருச்சுரூபத்தின் மணிமுடிசூட்டு விழாவின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. மடுத்திருப்பதியில் பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர். திருப்பதி முழுவதும் மக்கள் அமைத்த விடுதிகளால் நிறைந்திருந்தது. இவ்வாறு கூடிய மக்கள் தொகை பத்திரிகைக் கணிப்பின்படி 125,000 எனவும், காவற் துறை மற்றும் மன்னார் அரச அதிபரின் கணிப்பின்படி 150,000 எனவும் மதிப்பிடப்பட்டது. யூபிலி ஆண்டு திருவிழாவினைச் சிறப்பிக்க சில விசேட நிகழ்ச்சிகளும், வழிபாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. 29 யூன் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான மரியன்னையின் திருச்சுரூபப் பவனி திருப்பதியின் எல்லாப் பாதைகள் ஊடாகவும் நடத்தப்பட்டது. பவனியின் போது மக்கள் திருச் செபமாலை மற்றும் பிரார்த்தனையைச் செபித்து புகழ்ச்சிப் பாடல்களை இசைத்துத் தங்கள் வணக்கத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தினர்.

மேலும் இரண்டு இரவுகள் 10 மணி முதல் 12 மணி வரையும் இடம்பெற்ற சிறப்பு மரியன்னை வழிபாட்டின் போது திருச் செபமாலையின் மறை உண்மைகள் விளங்கப்படுத்தப்பட்டு, திருமணித்தியாலமும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

மணிமுடிசூட்டு வெள்ளி விழாவைச் சிறப்பிக்க தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மருதமடு மாதாவின்...

15ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையின் எல்லா ஆயர்களும் 30 யூன் முதல் யூலை முதலாம் திகதி வரையும் திருப்பதியில்தங்கியிருந்தனர். எனினும் திருமலை - மட்டு நகர் ஆயர் பேரருட்திரு இக்னேசியஸ் கிளனி யே.ச, அமெரிக்கா சென்றிருந்த காரணத்தினால் இவர் மட்டும் கலந்து கொள்ளவில்லை. கொழும்புப் பேராயர் தலைமையில் இடம் பெற்ற வேஸ்பர் வழிபாடு வானொலி மூலமாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது. வேஸ்பர் வழிபாட்டைத் தொடர்ந்து திருவிழாவிற்கு வந்திருந்த எல்லா ஆயர்களும் ஒரே நேரத்தில் பக்தர்கள் அனைவருக்கும் இறை ஆசீரை வழங்கினர்.

திருவிழாவின் அனைத்து நிகழ்வுகளும் எவ்வித தங்குதடையுமின்றி சிறப்பாக இடம்பெற்றன. மக்கள் ஒழுங்கைப் பேணிக் கட்டுபாட்டுடன் நடந்து கொண்டமை பற்றிக் காவற்துறையினரும் தங்கள் பாராட்டை வெளிப்படுத்தினர். மேலும் திருத்தலத்தில் பல்வேறு பணிகளுக்குப் பொறுப்பாயிருந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கடமையைத் திருப்திகரமான முறையில் செயற்படுத்தியிருந்தனர். திருவிழா நாள்களில் குறிப்பாக ஆன்மீகம் சார்பான உதவிகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மறை மாவட்டங்களிலிருந்து 60 அருட்தந்தையர்கள் வந்திருந்தனர். இதுவரையும் மடுத்திருப்பதியில் இடம்பெற்ற அனைத்துத் திருவிழாக்களிலும் இத்திருவிழாவே மிகச்சிறப்பான திருவிழாவாக அமைந்திருந்தது என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. திருப்பயணிகளும் தாம் இதுவரையும் மடுத்திருப்பதியில் கழித்த நாள்களை விட இத்திருவிழாவின் போது கழித்த நாள்களே மிகவும் திருப்திகரமான நாட்களாக அமைந்திருந்ததாகத் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர் (ஆயனார *Codex II, 41*).

## மணிமுடிசூட்டு நிகழ்வின் பொன்விழா - 1974

1924இல் நடந்தேறிய மணி முடிசூட்டு நிகழ்வின் 50வது ஆண்டு நிறைவு 1974இல் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் ஏப்ரல், மே மாதங்களில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு முன்ஆயத்தமாக ஆயர் தியோகுப்பிள்ளை தலைமையில் கூடிய யாழ்ப்பாண மறை மாவட்டக் குருக்கள் மன்றில் (ளுநயெவந) மருதமடு மாதாவின் திருச் சுருபத்தை மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் மக்கள் வணக்கத்திற்கு எடுத்துச்செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தை முன் நின்று செயற்படுத்தும் பணி குரு முதல்வர் அருட்பணி எஸ்.ஏ.மைக்கல்சாமி அமதி தலைமையில் குருக்களை உள்ளடக்கிய சிறு குழுவிடம் கையளிக்கப்பட்டது. குழுவினரின் ஏற்பாட்டில் மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் முன்னாயத்தமாக மூன்று நாள் சிறப்பு வழிபாடுகள், மறையுரைகள், ஒப்புரவு அருளடையாளம், திருப்பலி என ஆன்மீக ஆயத்தங்களும், ஆலயத்தையும் பாதைகளையும் அலங்கரித்தல் ஆகிய ஆயத்தங்களில் மக்கள் முழு ஈடுபாட்டுடன் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

பங்கிற்கு ஒதுக்கப்பட்ட நாளில் மாலை யில் புதுமைமிகு திருச்சுரூபம் விமரி சையாக வரவேற்கப்பட்டுச் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதில் அயற் பங்குகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். மறுநாள் மாலை வரையும்புதுமைமிகு திருச்சுரூபம் மக்கள் வழிபாட்டிற்கு அதே பங்கில் வைக்கப்பட்ட நிலையில், மக்கள் இரவிலும் காலையிலும் குழுவாகவும் தனியாகவும் வழிபாடு நடத்தினர். இந்த நாள்கள் மறைமாவட்டத்திற்கும், பங்குகளுக்கும் ஆன்மீகப் புதுப்பித்தலோடு கூடிய அருட்பொழிவின் காலமாக விளங்கியது.

## மணிமுடிசூட்டு நிகழ்வின் பவளவிழா - 1999

திருச்சுரூபத்தின் முடிசூட்டு நிகழ்வின் 75வது ஆண்டு 1999 ஆகும். எனி னும் இந்நிகழ்வு கிறிஸ்து பிறப்பின் மாபெரும் யூபிலி ஆண்டாகிய 2000 ஆண்டில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி 2000, 23 மே முதல் 19 யூன் வரையும் மன்னார் மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் புதுமைமிகு திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டு, ஒரு நாள் முழுவதும் குறிப்பிட்ட பங்கு மக்கள் வேண்டுதல் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. முன் ஆயத்தமாக எல்லாப் பங்குகளிலும் மறையுரைகளும், வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு மக்கள் ஆன்மீக நிலையில் தயார் செய்யப்பட்டனர். குரு முதல்வர் அருட்பணி சேவியர் குரூஸ் தலைமையில் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளச் சிறப்பான குழவினர் நியமிக்கப்பட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

## மணிமுடிசூட்டு நிகழ்வின் நூற்றாண்டு விழா - 2024

மணிமுடிசூட்டு நிகழ் வின் நூ ற்றாண்டு விழா 07 யூலை 2023 அன்று, மடுத் திருப்பதியில் மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் கொடி ஏற்றி ஆரம்பிக்கப்பட்டது. நூற்றாண்டின் முக்கிய செயற்பாடாக மடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் மன்னார் மறை மாவட்டத்தின் அனைத்துப் பங்குகளுக்கும், யாழ்ப் பாண மறை மாவட்டத்தின் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. மடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் மன்னார் மறைமாவட்டத்தில், மன்னார், முருங்கன், மடு, வவுனியா ஆகிய நான்கு மறைக்கோட்டங்களிலுள்ள 41 பங்குகளுக்கும் முதல் கட்டமாக 07.01.2024 முதல் 26ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டமாக மாந்தை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த 07 பங்கு களுக்கும் 02.04.2024 முதல் 05.04.2024 வரையும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டது. 06.04.2024 முதல் 30.04.2024 வரையும் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

மன்னார் மற்றும் யாழ்ப்பாண அனைத்துப் பங்குகளும், மடு அன்னையின் திருச்சுரூபத்தை கோலாகலமான வீதி, ஆலய அலங்காரங்களுடனும் தீப, தூப, மலர், கும்ப ஆராத்திகளுடனும் கொடிகள், பதாதைகள், வாயில் பந்தல் அலங்காரங்களுடனும் ஆடல் பாடல்கள், பாண்ட் வாத்திய இசைகளுடனும், சில இடங்களில் நாதஸ்வர மேளதாளத்துடனும் வரவேற்று மகிழ்ந்தனர். இதற்கு மக்கள் பங்குத்தந்தையர்களால் ஆன்மீக நிலையில் நன்கு தயார் செய்யப்பட்டிருந்தனர். இறைமக்கள் ஆன்மீக எழுச்சியுடன் இறைவேண்டல் செய்து, திருப்பலி ஒப்புக்கொடுத்து கண்ணீர் மல்க வேண்டுதல் செய்தனர். மருத மடுசெபமாலைத் தாயாரின் பரிந்துரை வழியாக இறைமக்கள் பெற்றுக் கொண்ட இறையாசீருக்காகவும் நலன்களுக்காகவும் நன்றி கூறி வேண்டுதல் செய்தனர்.

இந்நிகழ்வுகளுக்காக அயராது உழைத்த மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி. கிறிஸ்துநாயகம், யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி. ஜே.ஜெபரட்ணம் தலைமையிலான திருப்பயண ஏற்பாட்டுக் குழுவினர், மடுப் பரிபாலகர், உதவிப் பரிபாலகர்கள், மடு ஊழியர்கள், கலையருவி கத்தோலிக்க ஊடகப் பிரிவினர், யாழ் மறை அலை கத்தோலிக்க ஊடகப் பிரிவினர், மன்னார் மறைமாவட்ட நிலையங்களின் வாகன சாரதிகள் மற்றும் பங்குகளின் பங்குத் தந்தையர்களும், ஆர்வத்துடன் செயலாற்றிய பங்கு மக்களும், அனுமதி வழங்கிய மன்னார் ஆயர் மற்றும் யாழ்ப்பாணத்திற்கான ஒழுங்குகளை மேற் கொண்ட யாழ்ப்பாண ஆயரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

## முடிவுரை

1658களில் ஒல்லாந்தக் கிழக் கிந்தியக் கம்பனியினர் கத்தோலிக் கருக்கு எதிராக மேற்கொண்ட நெருக்கு வாரங்களின் விளைவாக, இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்குக் கிடைத்த மாபெரும் ஆசீரே மருதமடுத் திருத் தலமாகும். ஒல்லாந்தக் கலாபனையால் மாந்தையிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு மடுக்கிராமம் புகலி டம் வழங்கிய நிகழ்வே மடுத்திருத்தலத்தின் தொடக்கமாக மாறியது. நீண்டகால பல சவால்கள் மத்தியில் சிறிது சிறிதாக வளர்ச்சி கண்ட இத்திருத்தலம் இன்று இலங்கையிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் அதிகம் பிரபல்யம் பெற்றுள்ளது. 1921இல் திருத்தந்தை வழங்கிய அங்கீகாரத்துடன் 1924இல் மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டப்பட்டதன் நூற்றாண்டு இந்த வருடமாகும். 2015இல் திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தலத்தைத் தரிசித்தமை திருத்தலத்திற்குத் திருஅவை வழங்கிய மற்றுமோர் அங்கீகாரமாகும்.

படிப்படியாகப் பெரும் வளர்ச்சி கண்டு வரும் திருத்தலத்தை, வருடா வருடம் பல இலட்சம் மக்கள் தரிசித்து மருதமடு அன்னையின் பரிந்துரையையும், இறை ஆசீரையும் பெற்று உள்ளத்து அமைதி பெறுகின்றார்கள். இப்பின்னணியில் முடிசூட்டு நிகழ்வின் நூற்றாண்டின் நிகழ்வை முன்னிட்டு, மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னா ண்டோ அவர்கள் திருத்தல ஆலயத்தை "பெருங்கோவிலாக" *(Basilica)* அங்கீகரிக்கும்படி, திரு ஆட்சிப் பீடத்திற்கு விடுக்கும் கோரிக்கைக்கு நாமும் ஆதரவு வழங்குவதுடன் மருதமடு அன்னையின் பரிந்துரையையும் வேண்டுவோம்.

நன்றி : மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு மலர்

# நான்காவது உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாள்


திருப்பலியில் பங்கேற்கும் முதியோர் (Vatican Media)

நமதாண்டவர் இயேசுவின் தாத்தா பாட்டியும் அன்னை மரியாவின் பெற்றோர்களுமான தூய சுவக்கீன் அன்னா இவர்களின் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஜூலை *26* ஆம் நாள் சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக் கிழமையை உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளாக திருஅவையில் நாம் கொண்டாடி மகிழ்கின்றோம்.

*2021*ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் முதன் முதலில் திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட இந்த உலக நாளானது இவ்வாண்டு ஜூலை *28* ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, நான்காவது ஆண்டு உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

முதிர்ந்த வயதில் பலர் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, தனிமையைத் தோழமையாகக் கொண்டு வாழும் நிலையை சுட்டிக்காட்டும் வகையில், "முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்" என்ற திருப்பாடல் *71* (*71:9*) இல் உள்ள இறைவார்த்தைகளை, நான்காவது உலக தாத்தா பாட்டிகள் தினத்திற்கான கருப்பொருளாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்.

வயதுமுதிர்ந்த நிலையில் உள்ள ஒருவர் நட்புறவுடன் தனது வாழ்வைக் கடவுள் முன் எடுத்துரைக்கும் பகுதியாக அமைந்துள்ளது திருப்பாடல் *71* இல் உள்ள முதியோர் மன்றாட்டு. இத்திருப்பாடலில் உள்ள "முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்" என்ற இறைவார்த்தைகள். இதனையே இவ்வாண்டிற்கான கருப்பொருளாகத் திருத்தந்தை தேர்ந்தெடுத்துள்ளார்.

தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோரின் குணநலன்களையும், தலத்திருஅவையின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பையும் நாம் அறிந்துகொள்வதன் வழியாக தலைமுறைகளுக்கு இடையே இணைப்பை உருவாக்குதல், தனிமையை எதிர்த்துப் போராடுதல் போன்றவற்றை அவர்களுக்கு அளிக்க முடியும்.

தொடக்க நூல் குறிப்பிடும் வார்த்தைகளான "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று" (தொ.நூல் *2:18*) என்பதற்கேற்ப அவர்களை தனிமையில் விடாதிருத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் விதமாக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் உலக நாள் கொண்டாடப்படுகின்றது.

வீடு வாங்க விற்க



நம்பிக்கை
நேர்மை
திறமை

Eugene Dominic
sales representative
Direct: 647.388.4038

HomeLife/Future Realty Inc., Brokerage
205- 7 Eastdale Drive
Markham, ON L3S 4N8

**Tel: 905.201.9977**
Fax: 905 201 9229
eugenehomelife@gmail.com
eugenehomelife@gmail.com
Independently Owned and Operated, Realtor

MEGA Financial Group



- Life Insurance
- RESP
- RRSP

**Philip (Anantham) Antony**
*Insurance Advisor*
Direct: **(647) 280-8984**

# மிட்லாண்ட் திருத்தலத்தில்
















அருள் முனைவர்: குமார் ராஜா

இறைவேண்டலின் ஐந்து அடிப்படைக் கூறுகளில் முதன்மையானது ஆராதனை. அடுத்து வருவது இறைப்புகழ்ச்சி. இறைவேண்டலில் மிகவும் இனிமையானது, எளிதானது, மகிழ்ச்சி தருவது என்னும் பெருமை இறைப்புகழ்ச்சிக்கே உரியது. திரு விவிலியத்தின் பார்வையில் புகழ்ச்சி யும், நன்றியும் ஒன்றே.

நாம் ஏன் கடவுளுக்குப் புகழ்ச்சி செலுத்த வேண்டும்? இக்கேள்விக்கு நம் திரு அவையின் திருவழிபாடு நான்கு காரணங்களைச் சுட்டுகிறது:

*1. இறைவன் புகழ்ச்சி பெறத் தகுதியுள்ளவர்.*

இறைவன் ஒருவர் மட்டுமே எல்லாப் புகழ்ச்சிக்கும் தகுதியுள்ளவர். *எங்கள் ஆண்டவரே! எங்கள் கடவுளே, மாட்சியும், மாண்பும், வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில், அனைத்தையும் படைத்தவர் நீரே, உமது திருவுளப்படியே அவை உண்டா யின. படைக்கப்பட்டன (தி.வெ 4:11)* என்கிறது திருவெளிப்பாடு நூல்.

*2. இறைவனைப் புகழ்வது நீதியானது.*

ஒருவருக்கு உரியதைக் கொடுப் பது நீதி, கொடுக்க மறுப்பது அநீதி என்பதே நமது அனுபவம். *சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள் (மத் 22:21)* என்னும் இறைமொழிப் படி, கடவுளுக்குரிய புகழ்ச்சியைக் கொடுப்பதே நீதி. அதைக் கொடுக்கத் தவறும்போது அது அநீதியாகிறது.

*3. இறைவனைப் புகழ்வது நம் கடமை.*

*உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஆம், அவ்வாறு செய்வது தகுதியே (2தெச 1:3)* என்பது பவுலடியாரின் வாக்குமூலம்.

*4. இறைப்புகழ்ச்சி மீட்புக்குரிய செயல்.*

இறைவனைப் புகழ்வதால் கடவுளின் மாட்சி அதிகரிக்கப்போவதில்லை. மாறாக, நாம் தான் நன்மைகளை, ஆசிகளைப் பெற்றுக் கொள்கிறோம். சிறையில் அடைக்கப்பட்டிருந்த பவுலும், சீலாவும் நள்ளிரவில் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடியபோது, அவர்களின் கைவிலங்கு கள் உடைந்து, அவர்கள் விடுதலை அடைந்தது (தி.ப16:25) ஓர் எடுத்துக்காட்டு.

இறைப்புகழ்ச்சியினால் மனமகிழ்ச்சி, மனநிறைவு, அனைத்தும் நன்மைக்கே என்னும் மனநிலை மாற்றம் போன்ற பல்வேறு ஆசிகளை நாம் பெற்றுக்கொள்கிறோம். எனவே, எப்போதும் நம் நாவிலும், உள்ளத்திலும் இறைப்புகழ்ச்சி இருட்கட்டும்.

இறைப்புகழ்ச்சியின் நான்கு படிகள்:

மேலோட்டமாகப் பார்த்தால் இறைபுகழ்ச்சி என்பது ஒரே அலகாகத் தோன்றினாலும் .இறையியல் ஆய்வின் பார்வையில் இறைப்புகழ்ச்சியில் நான்கு படிகள் உள்ளன.

*1. இறைவனின் மாட்சிமைக்காகப் புகழ்தல்.*

*அவர் தம் எல்லையிலா மாண்பி னைக் குறித்து அவரைப் போற்றுங்கள் (திபா 159:2)* என்னும் இறைமொழியின்படி, இறைவனது மாட்சியைப் போற்றுவதே தலைசிறந்த இறைபுகழ்ச்சி. இறை மாண்பு, இறைமாட்சி என்பது என்ன? இறைவனின் பேரன்பு, பேரிரக்கம், உண்மை, வாக்குப் பிறழாமை, நீதிபோன்ற இறைவனின் இயல்பு களே அவரது மாட்சி. அவற்றையே முதன் முதலாக நாம் போற்ற வேண்டும். *ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில், அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு (திபா 118: 1)* என்பது பொருத்தமான எடுத்துக்காட்டு.

*2. இறைவனின் வல்ல செயல்களுக்காகப் புகழ்தல்*

*அவரது வல்ல செயல்களுக்காக அவரைப் போற்றுங்கள் (திபா 150:2)* என்னும் இறைமொழிப்படி, இறைவனின் வல்ல செயல்கள் போற்றப்பட வேண்டும். அடிப்படையில் படைப்பு, மீட்பு என்னும் இரண்டே இறைவனின் வல்ல செயல்கள். இவை இரண்டும் உலகின் தொடக்கம் முதல் இந்நாள் வரை நடந்துகொண்டே இருக்கின் றன என்பது நம் கவனத்திற்குரியது. *என் கடவுளின் மீட்புச் செயல்களை முன்னிட்டு, இன்னும் நான் அவருக்கு நன்றி செலுத்து வேன் (திபா 43:5)* என்பது இதற்கோர் எடுத்துக்காட்டு.

*3. இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளுக்காகப் போற்றுதல்*

இப்பொழுதுதான் நாம் நம்மைப் பற்றியே சிந்திக்கிறோம். நம் ஒவ் வொருவரின் வாழ்விலும் இறைவன் செய்த எண்ணிலடங்கா நன்மைகளுக்காக அவருக்கு நன்றியும், புகழ்ச்சியும் செலுத்துவது நம் கடமையல்லவா! *ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்? (திபா 116:12)* என்கிறார் திருப்பாடல் ஆசிரியர்.

*4. இறைவன் நம் வாழ்வில் அனுமதித்த துன்பங்களுக்காகவும் புகழ்தல்*

இது ஒரு திருவிவிலிய அறைகூவல். எவ்வளவு

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# இறைவேண்டலில்...

19ஆம் பக்கத் தொடர்ச்சி

துன்பங்கள் வந்தாலும், ஆண்டவர் அளித்தார்: ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக (யோபு 1:21) என்னும் யோபுவின் மொழிகள் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

இறைப்புகழ்ச்சி பற்றிய எச்சரிக்கை
இறைப்புகழ்ச்சியிலும் சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் திருவிவிலியமே நமக்கு எடுத்துச் சொல்கிறது.

1. வெளிவேட இறைப்புகழ்ச்சி:
வெளிவேடக்காரர்களாகிய உங்களைப் பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத் திருக்கிறார். இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர்: இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது (மாற் 7:6) என்பது எசாயாவை மேற் கோள்காட்டி இயேசு கொடுத்த எச்சரிக்கை.

2. முரண்பாடுள்ள இறைப்புகழ்ச்சி
தந்தையாம் இறைவனைப் போற்றிவிட்டு, அதே நாவால் அவரது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதரைத் தூ ற்றுவது ஒரு முரண் என்கிறார் யாக்கோபு. போற்றலும், தூ ற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர, சகோதரிகளே! இவ்வாறு இருத்தலாகாது என்கிறார்.

## இறைவேண்டலில் மன்னிப்பு

இறைவேண்டலின் பல பரிமாணங்களுள்,இறைவேண்டலின் அடிப்படைக் கூறுகளான ஆராதனை, இறைபுகழ்ச்சி, மன்னிப்பு, மன்றாட்டு, அர்ப்பணம் ஆகிய ஐந்தையும் நாம் ஆய்வு செய்கிறோம். ஆராதனை, இறைபுகழ்ச்சிக்கு அடுத்து வருவது மன்னிப்பு.
மன்னிப்பின் முக்கியத்துவத்தை நாம் நன்கறிவோம்.இருப்பினும், இறைவார்த்தையின் ஒளியில் நோக்கும்போது தான் மன்னிப்புக்கும், இறைவேண்டலுக்குமான நெருக்கமான உறவு நமக்கு நன்கு புலப்படுகிறது.

1. பிறரை மன்னிப்பது இறைவேண்டலின் நிபந்தனை.
பிறரை நாம் மன்னிக்கும்போதுதான், நாம் இறைவேண்டல் செய்வதற்கே தகுதியானர்கள் என் னும் உண்மை நம் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வேண்டும். நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது, யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால் மன்னித்து விடுங்கள் (மாற். 11:25) என்பது இயேசுவின் போதனை.

2. நமது மன்னிப்புக்காக நாம் மன்றாட வேண்டும்.
நமது அன்றாட இறைவேண்டலில் நாள் தோறும் நமது மன்னிப்புக்காக இறைவனை மன் றாட வேண்டுமென இயேசு கற்பித்தார். எனவேதான், எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால், எங்கள் பாவங்களையும் மன்னியும் (லூக். 11:4) என்று நாம் மன்றாடுகிறோம்.

3. நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும்.
பாவ மன்னிப்புக்காக மன்றாடுவது என்பது ஒன்று: பாவங்களை அறிக்கையிடுவது என்பது வேறொன்று: பாவங்களுக்குப் பரிகாரம் செய்வது என்பது பிறிதொன்று என்னும் புரிதல் பெரும்பான்மைக் கிறிஸ்தவர்களிடம் இல்லை. எனவேதான், பாவ அறிக்கை செய்யும் ஒப்புரவு அருட்சாதனப் பழக்கம் அருகி வருகிறது. இறைவார்த்தையைக் கூர்ந்து வாசிக்கும் போதுதான், பாவங்களை அறிக்கையிடுவதன் அவசியத்தை நாம் உணர்கின்றோம்.

என் பாவத்தை அறிக்கையிடாதவரை நாள் முழுவதும் நான்கதறி அழுததால், என் எலும்புகள் கழன்று போயின. என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன்: என் தீச்செயலை நான் மறைத்ததில்லை: ஆண்டவரிடம் என் குற்றங்களை ஒப்புக்கொள்வேன் என்று சொன்னேன். நீரும் என் நெறிகேட்டையும், பாவத்தையும் போக்கினீர் (தி.பா 32:3-5) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். தொடக்கத் திருஅவையில் நம்பிக்கை கொண்டோர் பலரும் தாங்கள் செய்த தவறை ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டனர் (தி.ப 19:18) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு அவை வரலாற்றை அறிந்தவர்கள் முதல் நூற்றாண்டுகளில் பொதுப் பாவ அறிக்கையே நிலவியது என்பதை ஒப்புக் கொள்வார்கள். ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள்:
ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள் (யாக் 5:16) என்னும் யாக்கோபின் அறிவுரை இதனை வலிமைப் படுத்துகிறது.

4. நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டும்.
பரிகாரம் என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்க ஈடாக, பாவக்கழுவாய் என்னும் நல்ல சொல்லைப் பயன்படுத்துகிறது நம் திருவிவிலியம். பாவ மன்னிப்புப் பெறு வார் (லேவி 4:31) என்பது அவற்றுள் ஒன்று. ஆனால், இயேசு வந்த பிறகு கழுவாய்ப் பலிக்கான தேவை இல்லாமல் போய்விட்டது. காரணம், இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகு மாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார் (உரோ 3:25) நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே: நம் பாவங் களுக்கு மட்டும் அல்ல,அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே (1யோவா 2:2) எனவே, பாவமன் னிப்புக் கிடைத்த பின் பாவத்திற்குக் கழுவாயாகச் செலுத்தும் பலிக்கு இடமேயில்லை (எபி 10:18)

ஆனால், பாவக் கழுவாயின் புதிய பரிமாணங்களை இயேசு அறிமுகம் செய்தார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் இயேசு, நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர் (யோவா 8:11) என்றார். பாவமற்ற வாழ்வே மிகச் சிறந்த பாவக் கழுவாய் என்பது இயேசுவின் புதிய போதனை.

இதனையே தீச்செயலை விட்டு விடுதல் ஆண்டவருக்கு விருப்பமானது: அநீதியைக் கைவிடுதல் பாவக் கழுவாய்ப் பலியாகும் (சீஞா 35:3) என்றும், தந்தை யரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக் கொள்கின்றனர் (சீஞா 3:3) என்றும் சீராக்கின் ஞானநூல் கூறுகிறது. சக்கேயுவின் மனமாற்றத்தின்போது அவர் எழுந்து நின்று, ஆண்டவரே! என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன்.
எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி, எதையாவது கவர்ந்திருந்தால், நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் (லூக் 19:8) என்று அறிக்கையிட்டது பாவக் கழுவாய்க்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. எனவேதான், இயேசு அவரை நோக்கி, இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று (லூக். 1:9) என்று அவரைப் பாராட்டி, ஏற்பிசைவு செய்தார்.


நமது இறைவேண்டலில் மன்னிப்பின் இத்தனை பரிமாணங்களும் இருக்குமாறு பார்த்துக் கொள்வோம்.

# மோதல்களைத் தவிர்த்து நல்லிணக்கத்தை மீட்டெடுப்போம்!

உலக அமைதி கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ள இவ்வேளையில், மோதல்களைத் தீர்த்து நல்லிணக்கத்தை மீட்டெடுக்கும் நம்பிக்கையில், ஒலிம்பிக் கால அமைதியை அனைவரும் மதிப்பார்கள் என்று ஆவலுடன் நம்புவதாக திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்

ஒலிம்பிக் கால அமைதிக்கான பாரம்பரியம் என்பது பண்டைய கிரேக்கத்தில் கிமு 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது. அனைத்துலக ஒலிம்பிக் அமைப்பு (IOC) பொதுவாக விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பண்டைய கருத்தை புதுப்பிக்க முடிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது

*Olympic truce* அதாவது போர்நிறுத்தம் என்பது ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னும் பின்னும் ஒரு "சண்டை நிறுத்தம்" அறிவிப்பதைக் குறிக்கிறது. ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தும் நகரம் தாக்கப்படாமல் இருப்பதையும், விளையாட்டு வீரர்களும் பார்வையாளர்களும் பாதுகாப்பாக விளையாட்டுகளுக்குச் சென்று அமைதியாக அந்தந்த நாடுகளுக்குத் திரும்பலாம் என்பதையும் உறுதிசெய்கிறது இப்போர்நிறுத்தம்.


பாரிசில் ஒலிம்பிக் போட்டிகள்

**அமைதியுடன் கூடிய உறவை வளர்க்கும் விளையாட்டுப் போட்டிகள் உலகில் விளையாட்டுப் போட்டிகள்**

அனைத்தும் பாலங்களை கட்டியெழுப்புவதாகவும், தடுப்புச் சுவர்களை உடைத்தெறிவதாகவும், அமைதியுடன் கூடிய உறவை வளர்ப்பதாகவும் இருக்கட்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். கோடை ஒலிம்பிக் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டிகளின் உண்மை உணர்வானது, போர் எனும் துயரநிலைக்கு எதிரான முறிவு மருந்தாகவும், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வழியாகவும் உள்ளது என்றும் பாலங்களைக் கட்டவும், தடுப்புச் சுவர்களை அகற்றவும், அமைதியான உறவுகளை ஊக்குவிக்கவும் விளயாட்டுக்கள் உதவட்டும் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

ஜூலை 26 அன்று பிரான்சின் பாரிசில் துவங்கிய கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 11ஆம் தேதி வரை இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பாரிசில் ஆகஸ்ட் 28ஆம் தேதி துவங்க உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகள் செப்டம்பர் 8ஆம் தேதி நிறைவுறும். இந்த மாற்றுத்திறனாளிகளுக்கான 22 விதமான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 4400 விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

# வெனிசுவேலாவில் தேர்தல் வெளிப்படைத்தன்மைக்கு திருப்பீடம் அழைப்பு

வெனிசுவேலா தேர்தலில் அரசுத் தலைவர் *Maduro* அவர்களே வென்றுள்ளதாக அரசு அறிவித்திருக்கின்றபோதிலும், அதனை தேர்தல் மோசடி என எதிர்க்கட்சிகள் ஏற்க மறுத்துள்ளன.
கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

கடந்த ஞாயிறன்று வெனிசுவேலா நாட்டில் இடம்பெற்ற அரசுத்தலைவர் தேர்தலையொட்டிய வன்முறைகளில் ஏறக்குறைய 20 பேர் மரணமடைந்ததை குறிப்பிட்டு, அரசியல் தலைவர்களிடையே அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்புவிடுத்துள்ளது திருப்பீடம்.

வெனிசுவேலாவின் அனைத்து அரசியல் தலைவர்களும் பேச்சுவார்த்தைகளிலும், அமைதி நடவடிக்கைகளிலும் தங்களை ஈடுபடுத்த வேண்டும் என அழைப்பு விடுத்த அமெரிக்க நாடுகளுக்கான திருப்பீட பிரதிநிதி பேரருள்திரு *Juan*


வெனிசுவேலா திருஅவை (Copyright: Aid to the Church in Need)

*Antonio Cruz Serrano* அவர்கள், தேர்தலின் வெளிப்படைத்தன்மைக்கு வெனிசுவேலா நாட்டு ஆயர்கள் அழைப்புவிடுத்துள்ளதற்கு திருப்பீடமும் தன் ஆதரவை வழங்குகிறது என்றார்.

*OAS* என்ற அமெரிக்க நாடுகள் அமைப்பின் சிறப்புக் கூட்டத்தில் திருப்பீடத்தின் சார்பில் உரையாற்றிய பேரருள்திரு *Cruz* அவர்கள், வெனிசுவேலாவின் அண்மை அரசுத்தலைவர் தேர்தலில் அனைத்து மக்களும் ஆர்வத்துடனும், உயிர்துடிப்புடனும் கலந்துகொண்டது அவர்களின் ஜனநாயகக் கடமையைக் காண்பிக்கிறது என உரைத்ததுடன், தேர்தலின் வெளிப்படைத்தன்மைக்கு வெனிசுவேலா ஆயர்களுடன் இணைந்து அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

தேர்தலில் தற்போதைய அரசுத் தலைவர் *Nicolis Maduro* அவர்களே வென்றுள்ளதாக அரசு அறிவித்திருக்கின்றபோதிலும், அதனை தேர்தல் மோசடி என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி ஏற்க மறுத்துவருகின்றன.

வெனிசுவேலா நாடு அண்மை தேர்தல் குறித்த வெளிப்படைத்தன்மையை காண்பிக்கவேண்டும் என அமெரிக்க நாடுகள் அமைப்பு கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட 18 நாடுகளின் ஆதரவு தேவைப்படும் நிலையில், 17 நாடுகளே ஆதரவளித்துள்ளன. 11 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன.

# நமது எளிய அன்பினைக் கடவுளுக்குக் கொடுப்பவர்களாக இருப்போம்



அப்பம் பலுகுதல் என்னும் நற்செய்தி பகுதியில் 5 அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த நிகழ்வானது காணிக்கையாக்குதல், நன்றி கூறுதல், பகிர்தல் என்னும் இறுதி இராவுணவின்போது இயேசு செய்த மூன்று செயல்களை அடையாளப்படுத்துகின்றது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்தார்.

### காணிக்கையாக்குதல்

நற்செய்தியில் வரும் ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்கள் கொண்ட சிறுவன், நம்மிடம் இருக்கும் நல்லவற்றைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும், தேவைப்படுவதை விட குறைவாக அது நம்மிடம் இருந்தாலும் அதனை பிறருக்குக் கொடுக்க நாம் "ஆம்" என்ற மனநிலை உடையவர்களாக வாழ வேண்டும் என்பதை அடையாளப்படுத்துகிறான் திருத்தந்தை என்றும் கூறினார்.

இச்செயலானது திருப்பலிக் கொண்டாட்டத்தின்போது குருவானவர் பீடத்தில் உள்ள அப்ப இரசத்தை அர்ப்பணிக்கும்போது ஒவ்வொருவரும் நம்மையே நாம் அர்ப்பணிக்க வலியுறுத்துகிறது என்றும், பல்லாயிரக் கணக்கான கூட்டத்திற்கு உணவளித்தல் என்பதற்கு முன்பு 5 அப்பம் 2 மீன் சிறிய அளவாகத் தோன்றினாலும், கடவுள் சிறியவற்றில் இருந்து வியப்புக்குரியவற்றை செய்ய வல்லவர் என்றும் எடுத்துரைத்தார்.

### நன்றி செலுத்துதல்

இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார் என்னும் இறைவார்த்தைகள் இயேசு இறைவனுக்கு நன்றி கூறும் செயலை மனத்தாழ்ச்சி மற்றும் அன்புடன் செய்தார் என்பதை எடுத்துரைக்கின்றன என்றும், இறைவா, என்னிடம் இருப்பதெல்லாம் நீர் எனக்குக் கொடுத்த கொடை, இயேசு வழியாக நீர் எனக்குக் கொடுத்த அன்பையும், என்னால் இயன்றதையும் மட்டுமே உமக்குத் திருப்பியளித்து நன்றி செலுத்த முடியும் என்ற மனநிலை கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### பகிர்தல்

திருப்பலியின் திருவிருந்துப் பவனியின்போது கிறிஸ்துவின் திருஉடலையும் திருஇரத்தத்தையும் பெற்றுக்கொள்ள பலிபீடம் நோக்கி நாம் செல்லும்போது ஒன்றிணைந்து செல்கின்றோம் என்றும், இது நமக்காக தன்னையேக் கையளித்த இயேசுவின் பகிரும் குணத்தின் பலன் என்றும் திருத்தந்தை கூறினார்.

மிகவும் அழகான தருணமான இந்த திருவிருந்துப் பகுதியானது கொடுப்பவர் பெறுபவர் இருவருக்குமிடையே அன்பின் ஒவ்வொரு அடையாளத்தையும் இறைவனின் அருளாகப் பார்க்கக் கற்பிக்கின்றது என்றும் கூறினார்.

இறைஅருளால் என்னிடம் இருப்பதை என் உடன் சகோதர சகோதரிகளுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் தனித்துவமான ஒன்று இருப்பதாக நான் உண்மையிலேயே நம்புகிறேனா அதைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேனா? அல்லது உதவ விருப்பம் இல்லாதவர் போல் இருக்கின்றேனா என்று நமக்குள் கேள்வி எழுப்ப வலியுறுத்திய திருத்தந்தை, என்னிடம் தனது அன்பை வெளிப்படுத்தும் கடவுளுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேனா, உரையாடல், சந்திப்பு, இணக்கம் கொண்டு பிறருடன் பகிர்ந்து வாழ்கின்றேனா என்று சிந்தித்துப் பார்க்கவும் அழைப்புவிடுத்தார்.

திருவிருந்துக் கொண்டாட்டத்தை நம்பிக்கையுடன் வாழவும் இறைஅருளால் ஒவ்வொரு நாளும் நடக்கும் அற்புதங்களை சுவைக்கவும் கண்டுகொள்ளவும் அன்னை மரியா நமக்கு உதவுவாராக என்று கூறி, தன் அப்போஸ்தலிக்க ஆசீரை திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கினார்.

# முதியோர் ஆற்றும் அளப்பரியப் பங்கினை உணர்ந்து வாழ்வோம்



முதியோருடன் நெருக்கமாக இருந்து அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், இதன் வழியாகக் குடும்பம், சமுதாயம், தலத்திருஅவை போன்றவற்றில் அவர்கள் ஆற்றும் முக்கியமான பங்கினை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். தாத்தாக்கள், பாட்டிகள், முதியோர் போன்றோருடன் நெருக்கமாக இருப்பதன் வழியாக குடும்பத்திலும், சமூகத்திலும், தலத்திருஅவையிலும் அவர்கள் கொடுத்துவரும் மிகப்பெரிய பங்கினை நாம் உணர்ந்துகொள்ள முடியும் என்றும், இத்தகைய முதியோர் வழியாக ஏராளமான கொடைகளையும், அருளையும் ஆசீரையும் நம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், அவர்கள், குடும்பத்திலும் சமுதாயத்திலும் தலத்திருஅவையிலும் அவர்கள் மாண்போடு நடத்தப்பட வேண்டும், மரியாதையோடு கவனிக்கப்படவேண்டும் என பல முறை வலியுறுத்தியுள்ளார்.

Chapel Ridge
FUNERAL HOME INC.

உங்கள் உறவொன்றைப் பிரிந்து தடுமாறும் வேளையில்
இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்
அனுபவத்தோடு கூடிய அன்பான சேவையை வழங்குகிறோம்

**மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் சேவைகள்**

**We provide a full range of services to families who have experienced a loss of a loved one, including:**
**Visitation**
**Funeral & Memorial Services**
**Receptions and**
**Arranging Burial & Cremation**

printfast.ca



Christeen Seevaratnam
416-258-6759

Vilosan Sivatharman B.Eng
416-993-0826



# Faith Matters. Choose a Catholic Cemetery.



Give your family peace of mind by pre-planning your Catholic funeral and burial. While it may feel overwhelming, we've made planning ahead easy to understand. Contact us today to receive your free cemetery and funeral planning package and estate planning guide.

Benefit from our interest-free payment plans today.

## Visit one of our locations

Assumption Catholic Cemetery
Mississauga

Catholic Cremation Services
Mississauga

Christ the King Catholic Cemetery & Reception Centre
Markham

Holy Cross Catholic Cemetery & Funeral Home
Thornhill

Mount Hope Catholic Cemetery
Toronto

Queen of Heaven Catholic Cemetery
Woodbridge

Resurrection Catholic Cemetery
Whitby

St. Mary's Catholic Cemetery
Barrie

CATHOLIC CEMETERIES & FUNERAL SERVICES
ARCHDIOCESE OF TORONTO

catholic-cemeteries.com | info@cc-fs.ca

416·733·8544 | @catholiccemeteriesfuneralservices